# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 29ம் நாள் (13-03-2025 வியாழக்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



பாடல் கிடைக்கப்பெற்ற தலம் திருக்கோணேச்சரம் - ஆகாயவெளிப் பூசை (மலைப் பூசை)

# தென்னாடு ஐம்பூதநாதர் பெருஞ்சிவனிரவு அருட்காட்சிகள்



முதலாம் சாமம்



இரண்டாம் சாமம்



மூன்றாம் சாமம்



நான்காம் சாமம்




**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org



# அறநெறிக் கல்வியின் தேவை

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

தமிழர் வேதம் நான்கில் முதலாவதாக எடுத்துக் கொள்ளப்படுவது அறம். நாம் எதைச் செய்தாலும் அறவழி நின்று செய்தலையே இது வலியுறுத்துகின்றது. அறவழி நிற்றல் என்பது இலகுவில் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. ஆகவே இதனை சிறுவயதில் இருந்தே உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையில் தோன்றியதே எங்கள் அறநெறிப் பாடசாலைகள் ஆகும்.

வெறுமனே வேலைக்கான அல்லது பொருளாதார வாழ் வியலுக்கான கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது பிள்ளை களை அறம் சார்ந்த கல்வியையும் பெற்றுக்கொள் வதற்கு பெற்றோர்களும், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஊக்கப்படுத்தவேண்டும். சைவ தமிழ் நூல்கள் பெரும்பாலும் அறம் சார்ந்த வாழ்வியலையே முன்னிலைப் படுத்துகின்றன. ஆகவே அதனை மாணவர்களுக்கு இளமை யில் இருந்தே கற்பித்தல், ஒரு வளமான எதிர்காலத்தினை உரு வாக்க வழிசமைக்கும்.

வெறுமனே அறம் அற்ற ஒரு பொறியியலாளரோ அல் லது மருத்துவரோ, எவ்வளவு திறமையாக இருந்தாலும் சமு தாயத்திற்கு எந்தவித பலனும் இல்லை எனலாம். பிள்ளை களை நாங்கள் எவ்வளவிற்கு தொழிற் கல்விற்கு ஊக்கப் படுத்துகிறோமோ, அதேபோல் அவர்களை அறவழியில் நிலைக்கச் செய்யும் அறநெறிக் கல்வியையும் பெற்றுக் கொள்ள ஊக்கமளிக்காவிடின் முழுமையான, நிறைவான ஒரு வாழ்வினை அவர்களுக்கு கொடுக்க நாங்கள் தவறு கிறோமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல - குறள் 39**

இம்முறை பெருஞ்சிவனிரவை முன்னிட்டு வடக்கு கிழக்கு முக்கிய ஆன்மீக இடங்களுக்கு ஒரு யாத்திரையை செய்தி ருந்தோம். இதில் அறநெறிக் கல்விக்கான முக்கியத்துவம் மற்றும் அறநெறிப் பாடசாலைகள் கிழக்கு மாகாணத்தில் சிறந்து விளங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது. வட மாகாணத்தில் அறநெறிக்கல்வி குறிப்பாக யாழ் மாவட்டத்-தில் மிகவும் குறைந்து காணப்படுவது போன்ற எண்ணப்பாடு தோன்றியது. (புள்ளிவிபரங்கள் அற்ற வெளிப்பார்வைத் தகவல்). இதனை மேம்படுத்த அண்மையில் மாண்பமை ஆளுநர் மற்றும் அரச அதிபர் வேண்டுகோளையும் விடுத்திருந்தனர். நாம் இதனை கருத்தில் கொண்டு ஞாயிற்றுக்கிழமை தோறும் வடமாகாணத்தில் அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடு கள் மேம்படுத்தப்படவேண்டும் மற்றும் ஆரம்பிக்கப்படவேண் டும்.

அறநெறிக் கட்டடம் இல்லாத ஊர்களில் ஏன், அருகில் உள்ள அரச பாடசாலைகளின் அதிபரின் அல்லது கல்வி அமைச்சின் அனுமதியுடன், அரச பாடசாலைகளில் ஞாயிறு தோறும் அறநெறி வகுப்புக்களை ஆரம்பிக்கக்கூடாது ? அதி பர்களே இந்த முன்னெடுப்பை மேற்கொண்டால் நிச்சயம் இது சாத்தியமாகும். இதனை சமூக ஆர்வம் கொண்ட அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தயவு செய்து கவனத்தில் கொள்ளவேண்டும் என்று விண்ணப்பம் வைக்கிறேன்.

மேலும் பெற்றோர்கள் மற்றும் வெளியக் கல்வி நிறுவன ஆசிரியர்களும் இதனை ஊக்கப்படுத்தவேண்டும். வெளியக் கல்வி நிறுவன ஆசிரியர்களே, இது உங்கள் பிள்ளை களுக்கும் பொருந்தும் என்பதை மனதில் கொள்ளுங்கள். ஆகவே எல்லோரும் அறநெறிக் கல்வியை வளர்க்க முன் வரவேண்டும். அதற்கான வசதிகளை சமுதாய வளர்ச்சி யின் பங்குதாரர்கள் முழுமையாக வழங்கவேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(12-02-2025) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 30ஆம் நாள் அன்று (12-02-2025 புதன்கிழமை) ஐம்பத்து நான்காவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.மாலதி முகுந்தன் அவர்கள், வேணி களஞ்சியம் உரிமையாளர் சிவத் திரு. குமாரசாமி கங்கைவேணியன் அவர்கள், பார்வையற் றோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் துணைவேந்தர் ஐயா அவர்கள் வேணி களஞ்சி யம் உரிமையாளர் சிவத்திரு. குமாரசாமி கங்கைவேணியன் அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் ஐம் பத்து நான்காவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந் தார்.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக, நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்தி, மாவட்ட மட்டத்தில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

(25-02-2025) – பெருஞ்சிவனிரவை முன்னிட்டு, தென்னாடு சைவ மாணவர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக் கான பூசைப் பொருட்கள் கையளிப்பு இடம்பெற்றிருந்தது. (25-02-2025) – திருக்கேதீச்சரத் திருத்தல பெருஞ்சிவனிரவு பெருவிழா வழிபாடுகளில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த, தமிழ்நாட்டு ஓதுவார்களுடன், தருமையாதீன திருக்கேதீச்சர கிளைமடத் தம்பிரான் சுவாமிகளும் தென்னாட்டில் வழிபாடுகள் ஆற்றி, மதிய விருந்தில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(25-02-2025) – தென்னாடு சிவனிரவு பெருவிழா வழிபாடு களில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த, திருவாவடுதுறை ஆதீன பேராசிரியர் கோவை மீ. சிவசண்முகம் ஐயா அவர்கள், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில், தென்னாடு சைவ மாணவர் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, சைவக் கருத்தரங்கு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியிருந் தார். (25-02-2025) – மாசித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(26-02-2025) – தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயி லில் சிவனிரவு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. நான்கு சாமமும் நால்வகை திரவிய திருமஞ்சனங்களுடன், நால்வகை இசை சமர்ப்பணங்களுடன் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. நான்கு சாமமும் ஐம்பூதநாதப் பெருமான் சிறப்பு அலங்காரங் களுடன் அடியார்களுக்கு அருட்காட்சி தந்தார். அடியார்கள் பலரும் நான்கு சாமப் பூசை வழிபாடுகளிலும் கலந்து சிறப்பித்தி ருந்தனர். அடியார்களுக்கு இறையமுதாக காலை அன்னதான– மும் வழங்கங்கப்பட்டது. மேலும் மாணவர் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(08-03-2025) – வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியி லிருந்து வருகை தந்திருந்த 80 மாணவர்கள், தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் ஐம்பூத நாதரை செந்தமிழில் வழிபாடு ஆற்றியிருந்தனர்.

(11-03-2025) – மாசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழி பாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (11-03-2025) – அமரர். சண்முகம் பொன்னையா பாலசிங்கம் அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் இடம்பெற்றன.

திருச்சிற்றம்பலம்

# வவுனியா தேசியக் கல்வியற் கல்லூரி மாணவர்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் வழிபாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தி- னால் முன்னெடுக்கப்பட்ட இவ்வாண்டுக் கான சர்வதேச இந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, வவுனியா தேசியக் கல்வியற் கல்லூரியிலிருந்து வருகை தந்திருந்த 80 மாணவர்கள், தொடர்ச்சி யாக இரண்டு நாட்கள் தென்னாடு செந் தமிழாகம சிவமடத்தில் ஐம்பூதநாதரை செந்தமிழில் வழிபாடு ஆற்றியிருந்த னர். அவர்களுக்கான அமுது செய்விக் கும் பணிகளும் இடம்பெற்றிருந்தன.

**திருச்சிற்றம்பலம்**



# தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முன்னிலை பெற்ற மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு



செல்வன். பரமேஸ்வரன் பிரசோதன் | செல்வன். இராகவன் அக்சத் | செல்வன். யோகேந்திரன் ஷாகித்யன் | செல்வன். மயூரன் ஜனார்த்தன் | செல்வி. கிருஷ்ணகுமார் அஷ்விதா

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை யில் மாவட்ட மட்டத்தில் முன்னிலை பெற்ற மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த தைத் திங்கள் 30ஆம் நாள் அன்று (12-02-2025 புதன்கிழமை) ஐம்பத்து நான்காவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீட்டுடன், நடை பெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்தி, மாவட்ட மட்டத்தில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் இடம்பெற்றிருந்தது.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட் டத்தில் முதல் இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் செல்வன். பரமேஸ்வரன் பிரசோதன், இரண்டாம் இடம் பெற்ற யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாண வன் செல்வன்.இராகவன் அக்சத், மூன் றாம் இடம் பெற்ற காரைநகர் வலந் தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை மாண வன் செல்வன். யோகேந்திரன் ஷாகித் யன் மற்றும் நவாலி மகா வித்தியாலய மாணவன் செல்வன். மயூரன் ஜனார்த் தன், ஐந்தாம் இடத்தினைப் பெற்ற காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை மாணவி செல்வி. கிருஷ்ண குமார் அஷ்விதா ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

**திருச்சிற்றம்பலம்**

# அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் சிவனிரவு வழிபாடுகள் (யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை)









# சோழர் கால வாரிவனத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வாரிவனேசர் திருக்கோயில் பெருஞ்சிவனிரவு வழிபாடுகள்








# அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் சிவனிரவு வழிபாடுகள் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)








# அருள்மிகு தாயுமானவர் சுவாமி திருக்கோயில் சிவனிரவு வழிபாடுகள் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)








# அருட்குருநாதர் ஒளியகம் சிவத்திரு ந.ரா.ஆடலரசு ஐயா அவர்களின் 17ஆம் ஆண்டு குருபூசை விழா







சிவநெறி செம்மல் சைவ சித்தாந்த சான்றோர் அருள் நெறிதீக்கை அம்பலவாண தேசிகர் அருட்குருநாதர் ஒளியகம் சிவத்திரு ந. ரா. ஆடலரசு ஐயா அவர்களின் 17 ஆம் ஆண்டு குருபூசை விழா வழிபாடுகள் கடந்த 16-02-2025 அன்று ஈரோட்டில் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வானது அருட்குருநாதர் கயிலைமாமணி சைவத்தமிழ்மணி ஒளியகம் சிவத்திரு ந.ஒளியரசு ஐயா அவர்கள் தலைமையில் நடைபெற்றிருந்தது. இவ்வழிபாட்டிற்கான வேள்விப் பணிகளை ஞானாசிரியர் திருப்பணி செம்மல் பவானி சிவத்திரு அ.தியாகராசன் ஐயா அவர்கள் முன்னெடுத்திருந்தார். இந்நிகழ்வில் தீக்கை வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. மேலும் சிவத்திரு ச.சுப்புராயன் ஐயா அவர்கள், சிவத்திரு மா.ஜானகிராமன் ஐயா அவர்கள், சிவத்திரு மா.சிரீதர் ஐயா ஆகியோரும் சிறப்பு சொற்பொழிவுகளை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**திருச்சிற்றம்பலம்**

# அட்டன் (ஹற்றன்) பெருநகரில் சைவத்தமிழ் பண்பாட்டுக் கொண்டாட்டம்




மலையகத்தில் அட்டன் பெருநகர் சாமிமலைப் பகுதியில், பெயர்லோன் கிராமத்தில் இலங்கை சைவநெறிக் கழக முதன்மை அனுசரணையில், அங்கு அமைக்கப்பட்டுள்ள குரு சிஷ்யர் சைவ முன்னேற்றக் கழகத்தின் திருஞானசம்பந்தர் சைவசமய அறநெறிப் பாடசாலையால் நடத்தப்பட்ட 'தைப்பொங்கல் பெருவிழா 2025', சைவத்தமிழ் பண்பாட்டுக் கொண்டாட்டம் எனும் தொனிப்பொருளில், இடபக்கொடிகளை தாங்கிய மக்கள் ஊர்வலத்துடன் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இலங்கை சைவநெறிக் கழக முதன்மை அனுசரணையிலும், பெயர்லோன் தமிழ் வித்தியாலய பழைய மாணவர் சங்கத்துணை அனுசரணையிலும், கடந்த 26ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (26-01-2025), பெயர்லோன் தமிழ் வித்தியாலயத்தின் மைதானத்தில் திருவருளால் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. இந்நிகழ்வானது பல தமிழ்ப் பண்பாட்டு கலைநிகழ்வுகளுடன், பலரும் கலந்து கொண்டவாறு சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

மேலும் இலங்கை சைவநெறிக் கழகத்தால் நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலை, தங்கக்கெலை என்னும் இடத்தில், நுவரெலியா தங்கக்கெலை சைவசமய மன்றமும் அம்மன்றத்தால் நடத்தவுள்ள காரைக்கால் அம்மையார் சைவசமய அறநெறிப் பாடசாலையும், கடந்த 09-02-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலையின் ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவுகளையும் பாடத்திட்டங்களையும் இலங்கை சைவநெறிக் கழகம் பொறுப்பேற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை சைவநெறிக் கழகமானது தொடர்ந்து அறநெறிகளை ஊக்குவித்து வருவதும், அறநெறிகளின் பெயர்களில் நாயன்மார்களின் பெயர்களை பறைசாற்றி வருவதும் போற்றுதலுக்குரியதாகும்.

**படம் - திருஞான சம்பந்தர் சைவ சமய அறநெறிப் பாடசாலை முகநூலிலிருந்து**

**திருச்சிற்றம்பலம்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



**சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்**

**1) சைவசமயம் நூல்களை எவ்வாறு வகைப்படுத்தும்?**

சைவசமயம் நூல்களை,

1) பொதுநூல்கள்(அபரநூல்கள்) சிறப்பு நூல்கள்(பர நூல்கள்) என்றும்,

2)பதிவாக்கிய நூல்கள்,பசுவாக்கிய நூல்கள், பாசவாக்கிய நூல்கள் என்றும் வகைப்படுத்தும்.

**2) சைவசமயத்தில் பொது நூல்கள் சிறப்பு நூல்கள் என்று கொள்ளப்படும் நூல்கள் எவை?**

சைவசமயத்தைப் பொறுத்தவரையில், சிவபரத்துவத்தையும் முப்பொருள் உண்மையையும் சைவசமய அறங்களையும் நுண்மையாகவும் (சூக்குமமாகவும்), உலகியல் அறங்களை மிகத் தூலமாகவும் (மிகப்பருமையாகவும்)கூறும் நூல்கள் பொது நூல்கள் எனப்படும். பொது நூல்கள் என்பதும் அபர நூல்கள் என்பதும் உபச்சார நூல்கள் என்பதும் ஒருபொருள் குறித்த சொற்களாகும். வேதம்,பதினெண் புராணங்களும் உப புராணங்களும் இதிகாசங்கள் முதலிய நூல்களும் ஏனைப் பிறவும் பொதுநூல்களில் அடங்கும். சிவபரத்துவத்தையும் முப்பொருள் உண்மையையும் சைவ சமயத்தாருக்குரிய தனித்துவமான அறங்களையும் மிகத்தூலமாக (மிகப்பெருமையாகவும் / மிகத்தெளிவாகவும்) உணர்த்தும் நூல்கள் சிறப்பு நூல்கள் எனப்படும். சிறப்பு நூல்கள் என்பதும் பர நூல்கள் என்பதும் உண்மை நூல்கள் என்பதும் ஒரு பொருள் குறித்த சொற்களாகும். சிவாகமங்களே சிறப்பு நூல்கள் எனப்படும்.

காமிக ஆகமம் பூர்வ பாகத்தில் தந்த்ராவதாரப் படலத்தில் சிவாகமங்களே பரம்(உண்மைஃசிறப்பு) என்றும், பிறமத நூல்களும் வேதாதி நூல்களும் அபரம்(உபச்சாரம்/பொது) என்றும் சாதிக்கப்பட்டுள்ளது.

गारुडं भूततन्त्रं च भैवरं वामतन्त्रकम् ॥
कापालं पाञ्चरात्रं च लाकुलं कुलशास्त्रकम् । तन्त्रं पाशुपतं चान्यत् पुराणं धर्मशास्त्रकम् ॥
इतिहासं षडङ्गं च ऋग्यजुस्साम संज्ञकम् । अथर्वणं तथा बौद्धं आर्हतं मतमेव च ॥
ऊर्ध्वस्रोतोऽक्षपाच्छास्त्रादपरं तदनुक्रमात् ।

**- காமிக ஆகமம்**

**பொருள்: -** காருடம், பூததந்திரம், பைவரம், வாமம், காபாலம், பாஞ்சராத்திரம், லகுளம், கௌலம், பாசுபதம் சாத்திரங்கள், புராணங்கள், தர்ம சாத்திரங்கள், இதிகாசங்கள், ஆறாங்கம், இருக்கு வேதம், யசுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம், பௌத்த நூல்கள், ஆருகத( சமண) நூல்கள் ஆகியவை அபரம் என்றும், ஊர்த்துவ சாத்திரங்களான ஆகமங்கள் என்பவை பரம்.

**வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்**
**ஓதும் பொதுவும் சிறப்பும்என்று உள்ளன**

**- திருமந்திரம் (2397)**

**உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பது**
**நிலவுமெய்ந் நெறி சிவநெறி என்பதும்**

**- பெரியபுராணம் (2723)**

வேதம் பொதுநூல் என்றும் சிவாகமங்கள் சிறப்பு நூல்கள் என்றும் சைவ நூல் மரபில் கொள்ளப்படும் விதியைத் திருமந்திரமும் வலியுறுத்துவதோடு, அறநூல்கள் வேத நூல்கள் எனப்படும் என்றும், முப்பொருள் உண்மையை விளக்கும் நூல்களே உண்மை நூல்கள் (சிறப்பு நூல்கள்) எனப்படும் என்றும் தெய்வச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் உணர்த்தியிருப்பதையும் இணைத்து நோக்குவோர் சிவஞானமுடையோராவர்.

**3) பொது நூல்(அபர நூல் / உபச்சார நூல்) சிறப்பு நூல் (பரநூல் / உண்மை நூல்) என்றால் என்ன?**

சித்தாந்த சரபம் சிவத்திரு. ஆ.ஆனந்தராசன் பெருமகனார் **“சிவஞானபோதம்-வழித்துணை விளக்கம்”** நூலில் இருவகைக் காட்சிகளை விளக்குதல் இவ்விடத்திற் சித்தித்தல் பொருத்தம் உடையது.

“ஞாயிற்றின் தோற்றத்தால் கண் பொருள்களைக் காணவல்லதாகிறது என்று கூறினோம். கண் பொருளைக் காண்பதாகிய காட்சியில் இருவகை உண்டு. அவை பொதுக்காட்சி, சிறப்புக் காட்சி என்பன. சூரியவொளியின் உதவியால் கண்பொருளைக் காணும்போது முதலில் இஃது ஓர் உருவம் என்பது மட்டுமே தெரியும். இவ்வாறு பொதுவாக உணர்தல் பொதுக்காட்சி எனப்படும். இங்ஙனம் முதலில் பொதுவாகக் கண்ட பொருளைப் பின்னர் மனம், புத்தி முதலிய உட்கருவிகள் ஆராய்ந்து இஃது இன்னது என்று சிறப்பாக அறுதியிட்டு உணரும். சிறப்பாக உணரும்போதுதான் பொருளின் பெயர், தொழில் முதலிய வேறுபாடுகள் தெரிய வரும். முன்னர்க் கூறிய பொதுக் காட்சியில் இவ்வேறுபாடுகள் தெரிதல் இல்லை. இவ்வேறுபாடுகள் தெரியும்படியாகப் பொருளைச் சிறப்பாகக் காணும் காட்சி சிறப்புக் காட்சி எனப்படும். இவ்விருவகைக் காட்சிக்கும் ஏதுவாக இருப்பது ஞாயிறு என்பதை மறத்தலாகாது.” - சிவஞானபோதம்- வழித்துணை

**விளக்கம்**

பொதுக்காட்சியால் **“இஃது ஓர் உருவம்”** என்பதே பெறப்படும். சிறப்புக் காட்சியாலேயே **“இஃது இன்னது”** என்னும் தெளிவு பிறக்கும். பொதுக்காட்சியைத் தருவன பொதுநூல்கள் என்றும், சிறப்புக்காட்சியைத் தருவன சிறப்புநூல்கள் என்றும் கூறலாம்.

பாலர் தரத்தில் கதிரவன் காலையில் கிழக்கில் உதிக்கும் என்றும் மாலையில் மேற்கில் மறையும் என்றும் கற்பிப்பர். இதனைக் கற்பிக்கும்போது, கதிரவன் பூமியைக் கிழக்கில் இருந்து மேற்குக்கு சுற்றுவதாகவே பாலர் மாணவரும் கருதுவர். மேற்பிரிவுத் தரத்திற்கு வரும்போதுதான், கதிரவனைச் சுற்றிப் பூமியே வலம் வருவதனையும் அவ்வாறு பூமி கதிரவனைச் சுற்றி வலம் வரும்போது, தன்னைத்தானே பூமி சுற்றுவதனால் கதிரவன் கிழக்கில் இருந்து மேற்குக்கு நகர்வதுபோல் தோன்றுகின்றதென்றும் எடுத்து விளக்குவர். பாலர் தரத்தின் இக்கல்வியோடு மேற்பிரிவுக் கல்வியை ஒப்பிட்டால், பாலர் தரம் அபரம் என்றும், மேற்பிரிவுத் தரக் கல்வி பரம் என்றும் கூறப்படும். அஃதாவது, பரம் என்றால் மேலானது என்றும் அபரம் என்றால் கீழானது என்றும் பொருள்படும்.

பாலர் தர நூல், இடைநிலைப் பிரிவுத்தரத்தார் நூல், மேற்பிரிவுத் தரத்தார் நூல் என்பவற்றை எடுத்துக்கொண்டால், பாலர் தரத்தாரின் நூல் இடைப்பிரிவுத் தரத்தாரின் நூலோடு ஒப்பிடும்போது அபரம் எனப்படும். அஃதாவது பொதுநூல் எனப்படும். இடைப்பிரிவுத் தரத்தாரின் நூல் பரம் எனப்படும். அஃதாவது, சிறப்பு நூல் அல்லது உண்மை நூல் எனப்படும். மேற்பிரிவுத் தரத்தாருடன் இடைநிலைத் தரத்தாரின் நூல்களை ஒப்பிட்டால், இடைநிலைத் தரத்தாரின் நூல்கள் யாவும் பொதுவென்றும் அபரம் என்றும் உபச்சாரம் என்றும் கூறப்படும். மேற்பிரிவுத் தரத்தாரின் நூல்களே எக்காலமும் எவ்வகையிலும் உண்மையென்றும் சிறப்பென்றும் பரம் என்றும் கூறப்படும்.

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## மூதூர் - மல்லிகைத்தீவு திருமங்களேசுவரர் கோயில்




சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு


### திருத்தல வரலாறு

திருக்கோணேசுவரத்தின் திருப்பணி-வரலாற்றில் தவிர்க்க முடியாத அரசனா-கத் திகழ்பவன் குளக்கோட்டன். 'இவரைப் பற்றிக் கூறும் இலக்கியங்களில் தட்ச-ணகைலாச புராணமே மிகவும் பழைமையானது. இம் மன்னன் கோணேச்சரக் கோயிலின் திருப்பணிக்காக சிந்து வேளாளர் குடியிலிருந்து அழைத்து வந்து கொட்டியாரப்பற்று, உட்பட நான்கு குறுநிலப் பிரிவுகளில் குடியமர்த்தி அரனூழியம் செய்வதற்குத் திட்டம் அமைத்துக் கொடுத்தான், அந்தவகையில்' கொட்டியாரப் பற்றிலிருந்து கோணேச்சர நாதருக்குரிய பூசைக்குத் தேவையான மல்லிகை மலர்கள் விளைவித்துக் கொடுக்கப்பட்டன. அத் தேவைக்கேற்றவாறு வேளாளர் குடியினரால் மல்லிகை மலர் விளைவித்த ஊராகையால் மல்லிகைத் தீவு என்று பெயர் பெறலாயிற்று இதனை இத்



கிழக்கிலங்கையில் திருகோணமலையோடு, கட்டுக்குளப் பற்று, கொட்டியாரம்பற்று, தம்பலகாமப்பற்று என நான்கு குறுநிலப் பிரிவுகள் இருந்தன. இவ் நான்கு பற்றுக்களிலும் தென்கயிலாயம் எனச் சிறப்பிற்கப்படும் திருக்கோணேசுவரத்தலத்தோடு தொடர்புடையவனும் கிழக்கிலங்கைச் சைவசமய வரலாற்றில் கால்தடம் பதித்த குளக்கோட்டு மகாராசாவின் ஆதரவும் ஆதிக்கமும் செல்வாக்குற்றதாகவும், குளக்கோட்ட அரசனால் திருக்கோயில் தொழும்பு, களுக்கென்று சிந்து நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டு குடியமர்த்தப்பட்ட குடிகள் தங்கிய இடங்களாகவும், வன்னிமை என்ற பட்டம் பெற்றிருந்த தலைவர்களாலும் ஆட்சிபுரியப்பட்ட தேசமாகவும் விளங்கியுள்ளது. இதற்கான ஆதாரங்களை கோணேசர் கல்வெட்டு உறுதிப்படுத்தியுள்ளது.

திருக்கோணேசுவரத்தின் தெற்குத் திசையில் அமைந்துள்ள கொட்டியாரப்பற்று பிரதேசத்தில் வயல்நிலங்களையும், மருதமரங்களையும் வளமாகக் கொண்டு விளங்கும் மல்லிகைத்தீவு எனும் கிராமத்தில் அமைந்துள்ள திருக்கோயிலே, திருமங்களேசுவரர் பதி ஆகும் இப்பதியில் மங்களேசுவரர் உடனுறை மங்களேசுவரியார் மூர்த்திகளாக எழுந்தருளியுள்ளனர். இத்தகைய சிறப்பை அவ்வூரைச் சேர்ந்த கவிஞர் ஒருவர் திருவூஞ்சல் பாடலொன்றில் அழகுறப் பாடிப் போற்றியுள்ளார்.

**"சீரான திருகோணமலை தென் கிழக்கின்**
**செழிப்பான வயல் நிலம் செல்வங்கள் இருப்பின்**
**ஊரான மல்லிகைத் தீவூராம் மண்ணில்**
**உயர்வான அடியார்கள் வாழுமுயர் பதியில்**
**மாரனை எரித்த சிவன் மங்களேஸ்வரனார்**
**மணம் செய்த அன்னையார் மங்களேஸ்வரியார்.."**



தலத்தின் மீது திருவூஞ்சல் பாடிய கவிஞரும் மேல்வருமாறு பாடியுள்ளார்.

**"குளக் கோட்டு மகாராசா அழைத்திங்கு வந்த**
**குறையாத சிந்து நாட்டு வேளாளர் குடியில்**

**வளமான கோணேசர் பூசைப் பணிக்காக.**
**மல்லிகைப் பூக் கொண்டு கொடுகின்ற பதி"**

மல்லிகைத் தீவுக் குடியினர், குளக்கோட்டன் வருகைக் குப் பின்னர் கங்குவேலி திருமங்களாய்ச் சிவன் கோயில் அகத்திய ஈச்சரம், நீலாப்பளை பத்தினியம்மன் ஆகிய கோயில்களின் பரிபாலனத்திலும் தொண்டூழியங்களிலும் பழைமைக் காலம் தொட்டு பங்கெடுத்து வந்துள்ளனர். காலப்போக்கில் கங்குவேலி கிராமத்தார்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புணர்வால் கோயில்ப் பிரச்சனை நீதிமன்றம் வரை சென்று, இறுதில் கோயில் பரிபாலனம் கங்குவேலி மக்களுக்குள்ளானது என்ற தீர்ப்பின் பின். மல்லிகைத்தீவு மக்களுக்கிருந்த பரிபாலனச் சுதந்திரம் மறுக்கப்பட்டது. இதனால் தங்களின் ஊரில் ஓர் சிவாலயத்தை எழுப்ப முடிவு செய்தனர்.

இதன் பிரகாரம் மல்லிகைத் தீவின் பிள்ளையார் கோயில் பூசகரின், சொப்பனத்தில் உதித்த இறைவன் **"திருமங்களாய் வனப்பகுதியில் பெண்டுகள் கேணியில் ஓர் சிவலிங்கம் மறை யப் பெற்றுள்ளது. அதைக் கொணர்ந்து கோயில் எழுப்பும்"** என்று திருவாக்கு மறைந்தருளினார்.

பூசகர் கிராம மக்களிடம் இத் தெய்வச் சொப்பனத்தைக் கூறினார். ஊர்ப்பிரமுகவர்கள் சிலர் ஒன்றாகத் திரண்டு மாட்டு வண்டிகளைப் பூட்டிக் கொண்டு திருமங்களாய் வனப் பகுதிக் குச் சென்று அங்கு பல மணி நேரங்களின் சிரமத்திற்குப் பின்பு தெய்வ வாக்கில் உணர்த்திய சிவலிங்கத்தை கண்டுபிடித்தனர். கிட்டிய சிவலிங்கத்தை மாட்டுவண்டியில் ஏற்றி மல்லிகைத் தீவிற்கு கொண்டு வரும் போது கூடவே நாகபாம்பும் சிவலிங் கத்தோடு காவலுக்கு வந்து சேர்ந்தது. 1953-10-03 அன்று ஆத்திஅடித்திடலில் ஓர் சிறிய கோயில் அமைத்து. அதனுள் அச் சிவலிங்கத்தை நிலைநிறுத்தி திருமங்களாய் வனத்திலி ருந்து கிட்டியதால் அம் மூர்த்திக்கு மங்களேசுவரர் என்று பெயர் சூட்டி நித்திய பூசை படையல்கள் புரிந்து வந்தனர்.

தற்போது இச் சிவாலயம் சிவாகம விதிப்படி அமைக்கப்



பட்டு குடமுழுக்கும் கண்டுள்ளது. கோயில் விமானத்துடன் கூடிய கருவறை, மண்டபங்கள், மணிக்கோபுரம், பரிபாரத் தெய்வக் கோட்டங்கள் என விரிவு பெற்றுள்ளது. புராணக் கதைகளைப் பிரதிபலிக்கும் சிற்பங்கள், மண்டபத் தூண்க ளில் விளங்கும் நாயன்மார் கற்படிமங்கள் என கலைநயம் கொண்ட கோயிலாகத் திகழ்கின்றது.

தற்போது கோயிலில் மூன்று வேளைத் தினப் பூசைகள் நடை பெற்று வருகின்றது. ஆடி மறைமதியில் (அமாவாசை) திருவிழாவும், தீர்த்த அருள்வாரியும் சிறப்பான விழாவாக. வருடாவருடம் இடம்பெற்று வருகின்றது. உற்சவ விழாக்க ளின் போது வேட்டைத்திருவிழா, தேர்த் திருவிழா, பஞ்சரதத் திருவிழா, பூங்காவனத் திருவிழா என்பவைகளும் விசேடமாக நடைபெறும். சிவவிரதப் பூசைகளில் சிவனிரவு, கழுவாய், ஆதிரை (ஆருத்திரா) என்பன சிறப்பு மிகுந்தவைகளாக இடம் பெற்று வருகின்றன.

**ஈசன் அவன் அல்லாது இல்லை என நினைந்து**
**கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து பேசி**
**மறவாது வாழ்வாரை மண்ணுலகத்து என்றும்**
**பிறவாமை காக்கும் பிரான்.**

**திருச்சிற்றம்பலம்**



# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:


## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்

**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

### பரவையார் திருமணம்

பறவைகள் தம்முடைய பெடையோடு இரைதேடியுண்டு பகற்பொழுதைக் கழித்து அந்திப் பொழுதிலே தம் கூடுகளை யடைந்தன. மாலைக் காலமுந் தனித்தவரைத் துன்புறுத்தும் வண்ணம் வந்தது. மகளிர் மனமும், படிற்றொழுக்கமுடை யோரது கொடிய தீவினையும் திருவைந்தெழுத்தை உணராத மடவோரது நெஞ்சமும் போல நெடிய வானம் இருளடைந்தது. வருந்தினால் மகளிர் காதலைத் தப்பி, யார் பிழைக்கக்கூடும், குற்றமற்ற திருவுள்ளமுடைய வன்றொண்டர் இவ்வாறு என்று இரவென்னும் நங்கையானவள் புன்சிரிப்புக் கொள்வது.

போலத் திங்கள் உதயமாயிற்று பிற ஆடவர் கைக்குப் பயந்து வருந்தித் தங்கள் கணவர் தொடுங்கால் முகமலர்ச்சி




யடையுங் குலமகளிர் போல ஆம்பல் மலரானது வெய் யோன் விளங்கும் பகற்காலத்தில் கூம்பித் தண்மதியின் கதிர்கள் தீண்ட மலர்ந்தன. நிலவுலகில் வாழும் உயிர்கட்கெல்லாம் புனிதத்தையும் இன்பத்தையுந் தண்ணளியையுங் கொடுத்து உலகமெல்லாம் ஒளிபரப்புவதாற் சிவபெருமானது திரு வெண்ணீற்றை ஒத்தது திங்களின் தோற்றம்.

பறவைகளின் ஒலியெல்லாம் அடங்கிய மாலைக் காலத்திலே திருநாவலூரரர் பரவையால் ஏற்பட்ட காதல் மயமாய்த் தம் உயிரைச் சூழ்ந்த தனிமையை உணர்ந்து வேறொன்றும் நினைவில்லாதவராயினர். சிவபெருமானது நெற்றிக்கண் பொறியால் அழிவுற்ற மன்மதன் இப்பொழுது உருவமெடுத்து வெளியே வந்து என் முன்னின்று அம்பு தொடுப்ப தெப்படி? சிவபெருமானது திருவருள் இருந்த திவ்வாறோ என்பார். திங்களைப் பார்த்து அவர் **"என் துன்பத் தைக் கண்டும் நீ தீப்போன்ற கதிர்களை என்மேல் வீச லாமா? என்னையாண்ட கடவுளுடைய திருமுடிமேல் இருக்கும் வெண்மதிபோலத் தண்ணிய தன்மையுடையை யல்லை"** என்றனர். கடலைப் பார்த்துக் **"கடலே, நீ என்னை யாண்ட வருக்கும் உண்ணும் பொருட்டு நஞ்சினைக் கொடுத்தாய். அவருக்கு அடிமைபூண்ட எனக்கு நீ இப்போது யாது செய்யமாட் டாய்."** என்றனர். பின்னர்த் தென்றற் காற்றைப் பார்த்துத் **"தமிழ் மாருதமே, நீ பிறந்தது எங்கள் பெருமான் வீற்றி ருக்கும் பொதிகையினிடத்து வந்தடைந்தது கடவுட்டன்மையு டைய சோழநாட்டின் மருத நிலத்திலுள்ள தடாகங்களிலே நீ இவ்விடங்களுக்குரிய குளிர்ச்சி யையும் நன்மணத்தை யும் மென்மையையுங் கொடுக்காமல் வெம்மையைக் கொடுக் கப் பழகியது எவ்விடத்து?"** என்றிவ்வாறு பலவா றியம்பிச் சுந்தரமூர்த்திகளிருப்ப, அவர் நெஞ்சம் பற்றிய அன்னவர் நெஞ்சம் எவ்வாறி ருந்ததெனக் காண்பாம்.

சிவபெருமானின் திருவடிகளை வணங்கிச் சென்ற பரவையார் திரு நாவலூரரைக் கணவராகப் பெறு வதற்குச் சென்று மீண்டார் போலத் தோழியர்கள் புடைசூழத் திருக் கோயிலிலிருந்து தம் வீட்டிற்குச் சென்று, பெருங்காதலால் மயக்கம் உடையவராய்ச் சிலம்புகள் மெல்ல ஒலிப்ப நடந்து,

ஒருவரோடும் பேசாது மலரணை யின் மேல் நிலா முற்றத்திற் கருகே இருந்தனர். இருந்து பக்கத்திலிருந்த தோழியைப் பார்த்து **"நாம் திருக் கோயிலுக்குப் போம்போது வீதியில் எதிரே வந்தவர் யார்?"** என்று வினவ, **"அவர் சிவபெருமானது திருவருள் பெற்ற ஆதிசைவ முதற்றொண்டர் தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்"** என்று தோழி மறு மொழி கூறினாள். சிவபெருமானின் அடியார் என்று கேட்டவுடனேயே காதல் அளவின்றி வளர்ந்து பொங்கினமையால், நிறை இழந்து மகளிரின் நான்கு இயற்கைக் குணங்களையும் அகலவிட்டு உயிர் ஒன்றை யும் தாங்கிப் பெருமூச்செறிந்து பரவையார் மெல்லணை மேல் வீழ்ந்தனர்.

சேடியர் அவள் மீது நறுமணமுடைய சந்தனக் குழம்பு பூசிப் பனிநீர் தெளித்து, இளந்தளிர்களையும் நீர்க்குளிரி என்னுந் தண் கொடியையும் இட்டு வெப்பம் நீக்கச் செய்த உபாயங்க ளெல்லாம் எரிகின்ற தீயிலிட்ட நெய்யை யொத் தன. அத்தழலிற் சுள்ளிகளையிட்டாற் போலக் காமனுந் தன் வில்லின் வலிமை யைக் காட்டி மலர்வாரி சொரிந் தான். பரவையார் இவை காரணமாக மலர்ப் படுக்கையிலே

துயில முடியாதவராய்த் தென்றற் காற்றையும் நிலவினையும் பொறுக்கலாற்றாது படுக்கை விட்டெழுந்து கூந்தலின் பாரத் திற்கு வருந்திச் சேடியரிடம் சொல்வாரானார்.

**"திங்களானது என்னைச் சுடுதல் எதனால்? சந்தனக் குழம்பாகிய நெருப்பைப் பனி நீரோடு விரவிப் பூசுகின்ற கொடி யவர்களே! இதை நீங்கள் செய்யாதீர்கள் இங்கே உலவுகின்ற நிலவும் தென்றலுந் தீயாய் வருகின்றன. சிவ பெருமானிடம் அருள் பெற்றவர் நமக்கு அருள் செய்கின்றா ரில்லை. இந்த நெடிய இராப் பொழுது எனக்கு விடியுமென்று தோன்றவில்லை. அடக்கமுஞ் சால்பும் என்னிடத்திற் றங்க மாட்டா. என் நெஞ்சும் மார்பும் உலந்து போகின்றன. இத்துன் பம் என்னவோ? பலரும் கூடிச்செய்கின்ற செயற்கையால் விளைவதோ தெரியவில்லை. காமன் அருகினின்றும் விலக மாட்டான். சிவபெருமானது திருவருள் பெற்ற நம்பியாரூரர் யான் படுந்துயரத்தையறிய மாட்டார். திருவாரூர்க் கடவுளே, உம்மைத் தவிர என் துயரத்தை யாரறிவார்? உம்மிடம் அன்பி லாதவர்போல நான் இவ்வாறு தளர்ச்சியுறலாமா?"** என்று ரைத்து வருந்தினார்.

அப்போது பரவையார்க்கும் வன்றொண்டர்கும் மணம் நடத்தும்படியாகத் திருவாரூர்ப் பெருமான் தம் அடியார் கட்குக் கட்டளையிட்டார். விடிந்தவுடன் அடியார்கள் இருவருக்கும் மங்கலம் நிகழ்வித்தார்கள். திருநாவலூரர் பரவையின் துணை திருவடிகளைச் சிந்தையிலுஞ் சென்னி யிலும் அமைத்துப் கொண்டு யோக நெறியிற் பயின்றனர். அவர் சிவபெருமானின் பாமாலை சூட்டி வழிபாடு செய்வ தோடு பரவையுடன் கூடி விளையாட்டயர்ந்தார்.

பரவையாருடன் சுந்தரமூர்த்தி திருமாளிகையிலும், பொழில்களிலும், தாமரைத் தடாகக் கரைகளிலுஞ் செய் குன்றிலும், திண்ணைகளிலும் இருந்து விளையாடிக் குளிர்ந்த முத்துப் பந்தரின் கீழ்இட்ட மலரணையினுந் தங்கி மகிழ்ந்திருக்கும் நாளிலே, ஒருநாள் சிவபெருமானைத் திருக் கோயிலிற் சென்று தொழும்விருப்பத்தோடு விண்ணவரும் புகழும் அழகிய பட்டாடையுடுத்து, சந்தனக் குழம்பொடு கலந்த குங்குமச் சாந்து பூசி சுழியமெனும் தலையணியும், பிற ஒள்ளிய மணிக்கலன்களு மணிந்து, இந்திரச் செல்வத் திற்கு மேற்பட்ட செல்வச் சிறப்பு விளங்கக் கையினில் அழ கிய பொற்கோலுங் காதினில் இலங்குங் காதணியுந் தோளின் மேற் பூணூலும் நெற்றியில் திருநீறுந் தரித்துக்கொண்டு, **"இக்கோலம் இவருக்கு அழகாயிருக்கிற"**தென்று அணி யிழைமகளிர் புகழ, விளங்குஞ் சைவத்திருக்கோலத்தோடு நம்பியாரூரர் திருவீதியில் எழுந்தருளினார்.

சிவபெருமான் **"தில்லை வாழந்தணர் தமடியார்க்கு மடியே"** என அடியெடுத்துக் கொடுத்தல்

இருபக்கத்திலும் வேறு வேறாக வருகின்ற கூட்டங்கள். **"திரு நாவலூரில் அவதரித்த நற்றவக்களிறே"** என்றும், **"சிவபெரு மானுக்கு அடியவரே"** என்றும், **"திருவாரூர் மறையவர் தலைவரே"** என்றும் வன்றொண்டரைப் போற்றித் துதித்துச் சென்றனர். முன் போகின்றவர்கள் தங்கள் கையில் ஆட்டுக் கடா, குரங்கு, கோழி, காடை, கவுதாரி, இவற்றைப் பிடித் துக்கொண்டு அவற்றிற்குரிய குறிப்பு மொழிகளைப் பயிற்றிச் செல்ல, உயர்ந்த மலர்ப் பூக்கூடை சுமப்பாரும் நறுமணங்கள் ஏந்துவாரும், அடைப்பை தாங்குகின்றவர் களுஞ் சூழ்ந்துவர, மாதர்கள் மயல் கொள்ளத் திருநாவ லூரர் திருவீதியிலெழுந்தருளிப் புற்றிடங் கொண்டார் திருக் கோயிலை வந்தடைந்தார். திருக்கோயிலின் முன்னுள்ள தேவாசிரியன் மண்டபத்திலே, நிலவுலகத்தில் வாழும் அடியார்கள் எண்ணிலா தோர் கூடியிருந்த பொழுது சுந்தரமூர்த்திகள் "இறைவன் என்னை இவர்களுக்கு அடிய வனாக்குங்காலம் எப்பொழுதோ வென நினைந்து திரு நெடுவாயிலை வணங்கிச் சிவபெருமான் எதிராகத் தோன் றிக் காட்சி கொடுக்க அவரின் திருவடிகளை வணங்கிச் சென்னிமேற் கொண்டு திருவடிப் புகழ்மாலை செப்பினர்.

அன்பர்களது உள்ளத்தில் அலர்ந்த செந்தாமரையாய் நிலைத்த பேரின்பத்தைத் தரவல்ல மலரடிகள் சிறியேனாகிய எனக்கு அத்தேனை ஈந்தன, உலகுய்யும் பொருட்டு பொன் னம்பலத்தில் உமையவள் திருக்கையால் தடவச் சிவந்தன. தவறாத பெருந் நடனஞ் செய்தன, எமன் உயிர் போகும்படி சினந்தன. தவத்தினருடைய நெஞ்சில் விளங்கின, தம்மை நினையாத வரைப் பிறவித்துன்பத்தில் அழுத்தின. நாத தத்துவத்திற்கும் அப்பாற்பட்ட ஒளியுடையன. மாலும் அயனுங் காணாத எல்லையுடையன, மறைக்குதிரைமேலே ஏறிவருவன. அறிவிலா தேனுடைய பிழைகளைப் பொறுத்து ஆண்டுகொண்டன. மேல்வருந்துன்பத்தைத் தீர்ப்பதற்கு இசைந்தன என்றிவ்வாறு துதித்து நின்ற நம்பியாரூரர்க்கு அடியார்க் கடியராந் தன்மையை அருள் செய்யக் கருதி அடியார்களது பரம்பரைத் தொண்டை அவர்க்கு உணர்த்தி அவர்கள் பெருமையை இனிது விளக்கினார்:

**"பெருமையாற் றம்மை யொப்பார்**
**பேணலா லெம்மைப் பெற்றார்.**
**ஒருமையா லுலகை வெல்வா**
**ரூனமே லொன்று மில்லார்**
**அருமையா நிலையி னின்றா**
**ரன்பினா லின்ப மார்வார்**
**இருமையுங் கடந்து நின்றா**
**ரிவரைநீ யடைவா யென்று"**


சிவபெருமான் அருளிச் செய்ய, திருநாவலூரர் குற்றந் தீரும் வழியைத் தாம் பெற்றதாகக் கருதிச் சிவபெருமானை எதிர் வணங்கித் துதிக்கச் சிவபெருமான் **"நீ அவர்கள் மீது நிறைசொன்மாலை பாடுக"** என்றனர். அப்போது சுந்தர மூர்த்தி **"பாடும் வகையை அடியேன் அறியேன். நீரே அடி யெடுத்துக் னென்று அடியெடுத்துக் கொடுத்தருள் செய்யவேண்டு"** மெனச் சிவபெருமான் **"தில்லை வாழந்தணர் தமடியார்க்கு மடியே"** னென்று அடியெடுத்துக் கொடுக்க, வன்றொண்டர் திருவருளினாலே பாடத் தொடங்கினர்.

சிவபெருமான் மறைந்துவிட, நம் நாயனார் அடியார் களை அடைதற் பொருட்டுத் தேவாசிரியன் மண்டபத் திற்குச் செல்லு பன்முறை நிலமுறத் தாழ்ந்திறைஞ்சி, அழியா வீரமுடைய வாராய்த் தமது உயர்காட்சிக்குப் புலனாய திருக்கூடத்தைப் அன்பர்களைத் தனித்தனி அடியே னென்று வைத்துப் பாடித் தொகையடியாரையும் பாடித் திருத்தொண்டத் தொகையை முடித்தார். பின்னர்ச் சிவ னடியார் எல்லாரும் பேருவகை யெய்தும் வண்ணம் திருக் கூட்டத்தின் நடுவிற் சென்றிருந்தார். திருத்தொண்டத் தொகையிற் கூறியமுறையிலேயே ஆசிரியர் சேக்கிழார் பெரியபுராண நாயன்மார் வரலாற்றை வகுத்து விரித்துரை செய்தனர்.

**திருச்சிற்றம்பலம்**
**திருமலைச் சருக்கம் - (303 - 349)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# நன்றே செய்வாய்! பிழை செய்வாய்?




திருவாசகம், அதன் பொருளாக அம்பலக்கூத்தனையே கொண்டது! மாணிக்கவாசகரிடத்தில் திருவாச ஏட்டுக்குப் பொருள் கேட்டபோது அவர் சிவனையே பொருள் எனக் காட்டி அவனுடன் கலந்தார். எனவேதான் மிக நீண்ட காலமாக திருவாசகத்துக்கு யாரும் பொருள் எழுதவில்லை. பொருள் இது தான் எனக் கொள்வதற்கும் திருவாசகம் சாதாரணமான ஒரு நூலும் இல்லை. மாணிக்கவாசகரின் இறை அனுபவம் அவரால் இயன்றவரை திருவாசகத்தில் வெளிப்படுத்தப்பட்டதே அன்றி, முழுமையாக வெளிப்படுத் தப்படவில்லை. சொற்களால் வெளிப்படுத்த முடியாத இறை அனுபவமல்லவா அது?

எனவே ஓதி உணர்வது ஒன்றே பொருள். அது எம் ஆன்ம பக்குவ நிலைகளுக்கு ஏற்ப பொருள்படும். மாணிக்கவாச கர் தன்னை முழுவதுமாக சிவபெருமானுக்கு ஒப்புக் கொடுத்தவர். சிவன் கழல் ஒன்றே நோக்காகக் கொண்டு, பிரிவு ஆற்றாமையைப் பாடிப்பாடித் தோற்றவர். **"தோற்ற வர்"** என்பது தன் இறையுணர்வைப் பாடுவதில் எனக் கொள்ள வேண்டும். ஏனெனில் முழுமையாக சொற்களுக்கு உள் கொண்டு வந்துவிட முடியாத இறையுணர்வைப் பாட வேண்டும் என விரும்பிய அவர், பல பாடல்களில் தன்னை கல் என்றும் நாய் என்றும் பாடி, இன்னும் இன்னும் தன் னைத் தாழ்த்துவதற்கு சொல் தேடித் தோற்றவர். இறை வனை குன்றமாகத், தலைவனாக, அரசனாக, சோதியாக, அமுதமாக இன்னும் பலவாறாக உயர்த்தி உயர்த்தி, இனி எப்படி உயர்த்துவது? அவன் உயரங்களால் கணக்கிட முடிப வனா? என்றும் இப்பொருட்களால் அவனைப் பாடி உயர்த்து தல் முறையா? என்றும் எண்ணி எண்ணித் தோற்றவர்.

எனினும் அப்பெரு ஞானியின் தோல்வி, அவர் பின் சிற்றறிவோடு வந்த பல கோடி ஆன்மாக்களின் வெற்றிக்கு வழியமைத்துக் கொடுத்தது! இதையே இறைவனும் விரும்பி னான். வழிகாட்டும் தன்மையோடே, மாணிக்கவாசகரைப் பூவுலகில் சிலகாலம் தம் நினைவோடு பணி செய்யுமாறு விடுத்து, திருவாசக அமுதத்தை எமக்கு அளித்தான். ஆனால் அது அறியாத மாணிக்கவாசகரோ,

**"அன்றே என் ஆவியும்**
**உடலும் உடமை எல்லாமும்**
**குன்றே அனையாம் என்னை ஆட்**
**கொண்ட போதே கொண்டிலையோ?"**

எனக் கேட்கின்றார்.

ஆனாலும் இறைவன் திருவுள்ளம், திருவாதவூரடிகள் அறியாமல் இல்லை. எதை இறைவன் செய்தாலும் அதில் ஆன்மாக்களுக்கு நன்மை மட்டுமே உண்டு என அவர் அறிவார். திருவாசகத்தில் "குழைத்த பத்து" பகுதியில் வரும் மேற்போந்த பாடலின் நிறைவில்,

**'எண்தோள் முக்கண் எம்மானே,**
**நன்றே செய்வாய்! பிழை செய்வாய்?**
**நானே இதற்கு நாயகமே' என்கின்றார்.'**

இவ்வடிகளுக்குப் பலரும் இறைவன் நன்மையும் செய்வான் பிழையும் செய்வான்' எனப் பொருள் காட்டுவர். அது முறையோ? இறைவன் பிழை செய்வானா? என்ன? பின்னாளில் வருபவர் அப்படியும் எண்ணக்கூடும் என்பதால் தான் மாணிக்கவாசகர் **'பிழை செய்வாய்?'** என, **'நீயா பிழை செய்வாய்?... நன்மை மட்டுமல்லவா செய்வாய்!'** எனவே உன் செயலுக்கு நான் ஆளாவேன் என்றவாறு பாடினார் எனக் கொள்க!

எனவே ஆரம்பத்தில் சொன்னது போல் திருவாசகத் துக்குப் பொருள் மாணிக்கவாசகர் நோக்கில் காண வேண்டும். ஆனாலும் எல்லாப் பாடல்களுக்கும் நாம் மாணிக்கவாசகர் நிலையில் நிற்க இயலாது என்பதே, திருவாதவூரடிகளின் உயர்வு! நம் தாழ்வு!

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. சிவ செந்தமிழாதன்**
**இளம்புலவர் - தென்னாடு**
**(முதுமாணி - சைவசித்தாந்தம்)**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# வழிகாட்டுங்கள்!

இன்று சமுக வலைத்தளங்களை மையமாகக் கொண்டு பல்வேறு மோசடிகளில் ஈடுபடும் ஒழுக்கக் குறைவான சமுகப் பொறுப்பற்ற பல இளையவர்களைக் காண்கின்றோம். எவ்வழியிலேனும் பணம் ஈட்டி விட வேண்டும் என முயலும் அவர்களை நாயகர்களாகப் பார்ப்பதற்கு போதைக்கு அடிமையான ஒரு இளைஞர் கூட்டம் வளர்ந்திருக்கிறது. இளைஞர்களின் ஒன்று கூடல்களும் களியாட்டங்களும் தலைதூக்கி நிற்கின்றன. இந்தப் பிறழ்வுக்கு என்ன காரணம்? சரியான வழிகாட்டல்கள் இல்லாமை ஒன்று தானே?

இன்றைய இளையவர்கள் எல்லாரும் தம் நாயகனாகக் கொண்டாட வேண்டிய ஞானசம்பந்த பிள்ளையின் வரலாற்றை நாம் காலம் தோறும் கற்று வருகின்றோம் ஆயினும், அவர் வழியில் செயற்படுகின்றோமா? என்றால் அது கேள்விக் குறியே.இளைய வயதினர் ஒருவர் பதினாறு வயது பருவத்தோடு தாம் தோன்றிய நோக்கத்தை நிறைவு செய்து இறைவனோடு ஒன்றானவர், அரசையும், ஆட்சி முறையையும் தம் கைக்குள்ளே வைத்திருந்த சமணரை அடியோடு அகற்றி சைவக் கோயில்களையும் நாட்டையும் மீட்டெடுத்த செயல்வீரர். அதனால் தான் சைவம் இன்றளவும் அவரை நாயன்மார்களுள் முதல்வராக வைத்து வழிபடுகின்றது. அவர் காலத்தின் பின்னும் தோன்றிய அடியார்கள் எல்லாம் அவரை வாழ்த்தியும் வணங்கியும் தம் பணி செய்தனர். அவர் சமகாலத்தில் வாழ்ந்த அவரிலும் வயதினால் மூத்த அப்பர் சுவாமிகள் முதலிய அடியவர்களும் தம் தலையில் திருஞானசம்பந்தரது திருவடிகளை சூட்டி மகிழ்ந்தனர். இத்தகு பெருமை பெற்ற திருஞானசம்பந்த சுவாமிகளின் வாழ்க்கையில் இருந்து இன்றைய நம் இளையவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பெரும் செய்தி ஒன்று முத்தாய் உள்ளது.

பதினாறு வயது பருவத்தினளாக பூம்பாவை திருஞானசம்பந்தர் முன் தோன்றி நின்றாள். அழகின் அத்தனை வனப்புகளும் அம்மாதரசியிடம் நிறைந்து வழிகின்றது. அவள் தந்தையாகிய சிவநேசர் ஞானசம்பந்தரை தன் மகளை திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றார். அவரோ பெரும் தனவந்தர்! ஆனாலும் ஞானசம்பந்தரோ பூம்பாவையை தன் மகளாக வருவித்து கொண்டார். திலோத்தமை என்கின்ற அழகியை படைத்த நான்முகன் தான் படைத்த பெண்ணின் அழகிலேயே மயங்கி நின்றான் என்று புராணங்கள் சொல்லும். ஆனால் ஞானசம்பந்த பிள்ளையோ தன் வயதின் ஆசைகளை அடக்கி இறைபணியே இனிய பணி என்று வாழ்ந்ததனாலே தான் யாருக்கும் கொடுக்காத உயர் நிலையைக் கொடுத்து பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமானும், 'தவமுதல்வர் சம்பந்தர்' என போற்றி பாடினார். ஆசைகளை அடக்கினால் அனுபூதி நிலையை அடையலாம் என்று தன் வாழ்வு மூலம் பாடம் புகட்டிய ஞானசம்பந்த பிள்ளையின் வழியிலேயே எமது இளைஞர்கள் நடக்க முன்வர வேண்டும்.

வாகன ஆசை, வெளிநாட்டு பயண ஆசை, கதாநாயகத்தன ஆசை, தொழில்நுட்ப சாதனங்களின் மீதான ஆசை என்பவற்றால் தினம் தினம் வழிமாறிப் போகும் இளைஞர்களை, அவர்கள் குடும்பத்தை, அக்குடும்ப எதிர்காலத்தை நாம் எண்ணிப் பார்க்கும் போது, அவர்கள் மீது கோபப்படுவதா? இரக்கப்படுவதா? எனும் நிலைக்கு தள்ளப்படுகிறோம்.

எம் இளையவர்களை பாதுகாத்தால் தானே என் தலைமுறை இந்த மண்ணில் வாழும். வழிமாறிப்போகும் இளைய சமுதாயத்தை சீரிய பாதையில் செம்மைப்படுத்த எம் முன்னவர்களின் வரலாறுகளை எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பான பணி எமது என்பதை உணர்ந்து இன்றைய சைவப் பெரியோர்கள் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்!

திருக்கேதீச்சரத்திற்கும், திருக்கோணமலைக்கும், வெடுக்கு நாறி மலைக்கும், குருந்நூர் மலைக்கும் எம் மரபுகள் மாறாத பாதுகாப்பு வேண்டுமெனில் என் தொன்மக்கள் பற்றிய சிந்தனை அடுத்த தலைமுறை மனங்களில் வேரூன்றசெய்ய வேண்டும். தவிர நம் போராட்டங்களால் பயனில்லை!

வலம் இலையேல் நாம் போராடுவதனால் பயன ஏதும் இல்லை. வீண் ஆசைகளை தவிர்த்து, விபரீத முடிவுகளிலிருந்து எம்மவர்களை மடைமாற்றி, எம் சமயம், எம் தத்துவம் பற்றிய அறிவினை ஊட்டவும், சிவ வழிபாடு ஈடேற்றத்திற்கு வழி, நம் நாயன்மார்கள் காட்டியதே ஆகச்சிறந்த பாதை என்பதை எடுத்துரைக்கும் பணிகளை பாடசாலைகள்தோறும் முன்னெடுக்கவும் வழிகாட்டவும் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகிறது!

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயில் சிவனிரவு வழிபாடுகள்

## முதலாம் சாமப் பூசை வழிபாடுகள்



## இரண்டாம் சாமப் பூசை வழிபாடுகள்



# தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயில் சிவனிரவு வழிபாடுகள்

## மூன்றாம் சாமப் பூசை வழிபாடுகள்









## நான்காம் சாமப் பூசை வழிபாடுகள்








# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அபிராமியம்மை உடனுறை கடைமுடிநாதர்- திருக்கடைமுடி (கீழூர்/கீழையூர்)

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 18ஆவது திருக்கோயில் திருக்கடைமுடி (கீழூர் / கீழையூர்)

**“ஒருத்தனை யல்லதிங் குலகமேத்தும்**
**கருத்தவன் வளநகர் கடைமுடியே”**

பொன்துகள் திகழும் காவிரியாற்றின் அலைகளின் நீர் முறையாகச் சென்று அடையும் கடைமுடியில் விளங்குகின்ற அற்புதக் கோயிலே அருள்மிகு அபிராமியம்மை உடனுறை கடைமுடிநாதர் திருக்கோயில்.

**அமைவிடம்:** மயிலாடுதுறை, தமிழ்நாடு.

தற்போது ‘கீழையூர்’ என்று அழைக்கப்படுகிறது. திருநனிபள்ளிக்கு வடமேற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. மாயவரம்- திருநாங்கூர் பாதையில் கீழையூர் வழிகாட்டி பார்த்து இடதுபக்க சாலையில் 1 கி.மீ. சென்றால் கோயிலை அடையலாம். மாயவரத்திற்கு அருகில் உள்ள ஆனந்ததாண்டவபுரத்திலிருந்து 3 கி. மீ. தொலைவில் உள்ளது.

**இறைவர் திருப்பெயர்:** கடைமுடிநாதர், அந்திசம்ரட்சணேசுவரர்.
**இறைவியார் திருப்பெயர்:** அபிராமி அம்மை
**கோயில் மரம்:** கிளுவை
**தீர்த்தம்:** கருணாதீர்த்தம்
**வழிபட்டோர்:** சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேக்கிழார், பிரமன், கண்வ மாமுனிவர் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.
**பாமாலை:** சம்பந்தர் , சேக்கிழார்.

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**அருத்தனை யறவனை யமுதனைநீர்**
**விருத்தனைப் பாலனை வினவுதிரேல்**
**ஒருத்தனை யல்லதிங் குலகமேத்தும்**
**கருத்தவன் வளநகர் கடைமுடியே (1-111)**





**சேக்கிழார் பெருமான் பாடற்குறிப்பு**

**திருமறைச் சண்பைய ராளி**
**சிவனார் திருக்கண்ணார் கோயில்**
**பெருவிருப் பாலணைந் தேத்திப்**
**பிஞ்ஞகர் கோயில் பிறவும்**
**உருகிய அன்பால் இறைஞ்சி**
**உயர்தமிழ் மாலை கொண் டேத்தி**
**வருபுனற் பொன்னி வடபால்**
**குடதிசை நோக்கி வருவார் (12-28-285)**

**திருத்தலச் சிறப்பு**

திருமணத்தடைகளை நீக்கி அருள்புரியும் அற்புதத் தலமாக அருள்மிகு அபிராமியம்மை உடனுறை கடைமுடிநாதர் திருக்கோயில் விளங்குகிறது. ஆகையினால் அடியவர்கள் பலரும் இங்கு திருமாங்கல்ய வழிபாடு செய்து வழிபாட்டு வருகின்றனர். இத்தலத்தில் காவிரி வடக்கு முகமாக வந்து பின் மேற்காக ஓடுவதும் ஒரு சிறப்பம்சமாகும். மேற்கு பார்த்த சிவத்தலங்கள் தமிழகத்தில் சில இடங்களிலேயே உள்ளன. அவற்றில் இதுவும் ஒன்றாக காணப்படுகின்றது. இலிங்கத் திருமேனி 16 பட்டைகளுடன் அற்புத இலிங்கமாக சற்று உயர்ந்த பாணத்துடன் அமைந்திருப்பதும், இத்தலத்தின் மற்றொரு சிறப்பாகும்.

திருவருள்மிகு கடைமுடிநாதர் திருக்கோயில் எம் பெருமான் சிறப்பை, வள்ளல் பெருமான் தாம்பாடி அருளிய விண்ணப்பக் கலிவெண்பாவில், “மாவின் இடைமுடியின் தீங்கனி என்று எல்லின் முசுத் தாவும் கடைமுடியின் மேவும் கருத்தா” என்று போற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இத்திருத்தலவூர் மக்கள் வழக்கில் கீழையூர் என்றும் கீழூர் வழங்குகிறது. (கீழையூர் என்பது ஏழு ஊர்கள் சேர்ந்து -

மிகப் பெரிய ஊர். இதனால் இதற்கு ஏழூர் என்றும் பெயர் வழங்குகிறது.). இத்தல இறைவனின் 'கடைமுடிநாதர்' என்ற பெயரினால் நாம் நமது ஆயுளின் கடைசி காலத்தில் அவரைப் பற்ற வேண்டும் என்றும், நமது இறுதிக் காலத்தில் நம்மைக் காப்பவர் அவரே என்று நமக்குத் தெளிவாக புலப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

### திருத்தல வரலாறு

நான்முகன் பெருமானார் இத்தலத்தின் சிறப்பை உணர்ந்து இங்கு இறைவனுக்கு ஓர் திருக்கோயில் எழுப்பி இறைவனைப் போற்றி வணங்கி வந்தார். தன் பெயரில் ஒரு தீர்த்தம் உண்டாக்கி அதற்கு பிரம்ம தீர்த்தம் எனப் பெயரிட்டு அப்புனித நீரால் இறைவனை வழி பட்டுள்ளார். இந்த பிரம்ம தீர்த்தம் கோயிலின் நேர் எதிரில் அழகுற விசாலமாக அமைந்துள்ளது. மகிழ்ந்த சிவன், அவருக்கு இங்கிருந்த கிளுவை மரத்தடியில் அருட்காட்சி தந்தார். வீதியில் உள்ள கிளுவை மரத்தின் கீழ், கிளுவைநாதர் இருக்கிறார். இவரே இக்கோயிலின் ஆதிமூலவர் ஆவார்.

கண்வ மாமுனிவரும் (சகுந்தலையின் வளர்ப்புத்தந்தை) இத்தல இறைவனை வழிபட்டு தன் புண்ணிய பலன்களைப் பெருக்கிக் கொண்டார் என்பது இத்தலத்தின் மற்றொரு சிறப்பாகும். இவர் காவிரியில் நீராடி வழிபட்ட இடம் இன்று கண்வமகான் துறை என்ற காரணப் பெயர் கொண்டு விளங்குகிறது.





### திருக்கோயில் அமைப்பு

கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது. பிரமன், கண்வ மாமுனிவர் ஆகியோர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. சிறிய கோயில் - பழைமையானது. குளக்கரையில் விநாயகர் உள்ளார். மேற்கு நோக்கிய சந்நிதி. முகப்பு வாயிலைக் கடந்தால் வீதியில் விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகளும் அடுத்துத் தலமரம் கிளுவையும் உள்ளன. முன் மண்டபம் வௌவால் நெத்தி மண்டப அமைப்புடையது. முன் மண்டபத்தில் பைரவர், நால்வருள் மணிவாசகர் நீங்கலாக மூவர் உள்ளனர். சுவாமி சந்நிதி பக்கத்தில் நடராச சபை உள்ளது. எழுந்தருளல் திருமேனிகள் பாதுகாப்பு கருதி **'வெள்நகர்'** கோயிலில் வைக்கப்பட்டுள்ளன.

மூலவர் சற்று உயர்ந்த பாணத்துடன் காட்சி தருகிறார். வீதியில் உள்ள நவக்கிரக (ஒன்பாங்கோள்) மண்டபம் எண்கோண வடிவ ஆவுடையார் மீது அமைக்கப்பட்டுள்ளது. சிவன் சன்னதி சுற்றிலுள்ள தென்முகக்கடவுளும் (தட்சிணாமூர்த்தி), பைரவரும் இடதுகாதில் வளையம் அணிந்துள்ளனர். கடைமுடிவிநாயகர் மற்றும் சுப்பிரமணியருக்கும் சன்னதிகள் உள்ளன. அபிராமித் தாயார் தெற்கு நோக்கி நின்ற கோலத்தில் அருள் காட்சி தருகிறார். திருவாதிரை, மாட்டுப்பொங்கலன்று சுவாமி புறப்பாடு, கார்த்திகை தீபம் முதலிய ஒரு சில சிறப்பு விழாக்களே நடத்தப்படுகின்றன. நாடொறும் நான்குகால வழிபாடுகள் நடைபெறுகின்றன.

அபிராமி அன்னையை, அருகிலுள்ள கண்வமகான் துறையில் நீராடி வெள்ளிக்கிழமை வழிபாடு செய்தால் விரைவில் திருமணம் கைகூடும் என்பது தொன்நம்பிக்கை. கன்னிப் பெண்கள் திருமணத்தடை நீங்க திருமாங்கல்ய வழிபாடு செய்து வருவது வழமை.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்றொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**திருமலைச்சிறப்பு பாடல் - 8**

**காதில் வெண் குழையோன் கழல்தொழ நெடியோன்**
**காலம்பார்த் திருந்ததும் அறியான்,**
**சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையில்**
**துதிக்கையோன், ஊர்தியைக் கண்டு.**
**மீதெழு பண்டைச் செஞ்சுடர் இன்று**
**வெண்சுடர் ஆனதென் றதன் கீழ்,**
**ஆதிஏனமதாய் இடக்கலுற் றான்**
**என்றதனைவந் தணைதரும் கலுழன்.**



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

**பொருள்:** காதிலே வெண்சங்குக் குழையை அணிந்த இறைவன் பாதங்களைத் தொழுவதற்கு நெடியோனாகிய திருமால் உரிய காலத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த செய்தியை அறியாதவனாகி, வெள்ளை ஒளியுடைய கயிலையின் சாரலில் உள்ள ஒரு முழையிலே விநாயகருடைய வாகனமாகிய பெருச்சாளியைப் பார்த்து முன்காலத்தில் மேலே எழுந்த செஞ்சுடராகிய அக்கினித் தூணமானது



பவானி சிவ
அ.வேலுச்சாமி

இன்று வெள்ளை ஒளித்தூணாய் நிற்கின்றது என்ற எண்ணத்தால அதனை ஆதிப் பன்றி உருவெடுத்து அடிதேடி நிலந்தோண்டி நிற்கின்றான் திருமால் என்று கருதி, கருடன் அப்பெருச்சாளியை வந்து சேரும்.

மேற்பாட்டில் நான்முகன் ஊர்தியாகிய அன்னப்பறவையை காணாது மயங்குகின்றான். இப்பாட்டில் ஊர்தியாகிய கருடன் உடையவனாகிய திருமலைக் காணாது மயங்குகின்றது.

**வி-உரை :** வெண்குழையோன் - சிவபெருமான், நெடி-யோன் முழை - மலையில் பொந்து - விட்டுணு

கயிலையில் பெருமானை வழிபாடு செய்வதற்குத் தேவர்கள் காலம் பார்த்துக் காத்துக் கிடந்தார்கள் என்பதை இந்தப் பாடல்கள் மூலமாக அறியலாம்.

**(பாடல் 10)**

**வேத நான் முகன்மால் புரந்தரன் முதலாம் விண்ணவ ரெண்ணிலார் மற்றும்**
**காதலான் மிடைந்த முதல்பெருந் தடையாங் கதிர்மணிக் கோபுரத் துள்ளான்**
**பூதவே தாளப் பெருங்கண நாதர் போற்றிடப் பொதுவினின் றாடும்**
**நாதனா ராதி தேவனார் கோயினாயகனந்தியெம் பெருமான்.**

**பொருள் :** பிரமன் விட்டுணு இந்திரன் முதலிய தேவர்க-ளும் மற்றும் எண்ணில்லாத முனிவர் முதலியோர்களும், வரம்பெறும் ஆசையுடன் நெருங்கிக் கூடித் தடைபட்டு வெளி-யே காத்திருக்கும் முதல் திருவாயிலின் கோபுரத் துவாரத்-திலே வீற்றிருக்கின்றான். சிவபூதங்கள் வேதாளங்கள் முதலிய கணநாதர்கள் துதிக்க அம்பலத்தே நித்தமாகிய திருக்கூத்து ஆடும் நாதனும் முதற்கடவுளும் ஆகிய சிவ பெருமானுடைய திருக்கோயிலின் அதிகாரியாகிய நந்தியம் பெருமான்.

**வி.உரை :** எம்பெருமான் - திருநந்திதேவர். ஆதிதேவனார் கோயில் நாயகன் நந்தியெம்பெருமான் முதல் பெருந்தடையாம் கதிர்மணிக் கோபுரததுப் போற்றி உள்ளான் என்று கூட்டிப் பொருள் கூறுக என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் உரையில் குறிப்பிட்டுள்ளார். கோபுரத்து உள்ளார்கள் யாவர் எனின் நாயகன் நந்தியெம்பெருமானும், கண்ணரும் தோளருமாகிய அடியார்களுமாம் என்று கூறியுள்ளார்கள். வேத நான்முகன் - வேதங்களை ஓதுபவன் வேதமுதல்வன் என்பதன்று.

மிடைந்த முதல் பெருந்தடை நந்திதேவருடைய ஆணைக்கு உட்பட்டு நின்று அவரது உத்தரவையும் சிவபெருமானது சேவைக்குரிய காலத்தையும் எதிர்பார்த்தவர்களாய்க் காத்துக் கொண்டு நெருங்கிக் கூடியிருக்கும் முதல் திருவாயில். சிவ பெருமானின் திருக்கோயில்களில் முதல் கோபுரத் திரு வாயிலை திருநந்திதேவர் எழுந்தருளியிருப்பது காணலாம். திருவாரூர்க் கோயிலில் கிழக்குக்கோபுர வாயிலில் திருநந்தி தேவர் உள்ளார்.

**நாயகன் -** கோயில் அதிகாரம் பெற்றவர். சிவகணங்களுக்கு

முதல்வராய், கோயில் அதிகாரியாய், சிவபெருமானாகிய சர்வாதி குருவினிடத்து சிவாகமம் முதலிய எல்லாச் சாத்தி ரங்களையும் கேட்ட முதற்சீடராய், அவ்வகையில் தாம் கேட்ட உண்மைப் பொருளை உலகிற்கு உபகரிக்கத் திருக் கயிலாய பரம்பரை ஆசாரியர்களுக்கு முதலாசிரியராய் விளங்கு பவர் நந்தியெம்பெருமான் என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் உரையில் கூறியுள்ளார்.

**நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்**
**நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி**
**மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்**
**என்றிவ ரென்னோ டெண்மரு மாமே**

என்பது திருமந்திரம். திருநந்திதேவர், சனத்குமாரர், சத் தியஞான திரிசினிகள். பரஞ்சோதியார், மெய்கண்டார் என்ற சுத்தாத்துவித சைவ சித்தாந்த சந்தான பரம்பரை விளக்கமும் இங்கே அறியத்தக்கன. சிவபெருமானுக்கு நந்தி என்ற பெயர் உண்டு. **"நந்தி நாமம் நமச்சிவாயவே"** என்பது திருமுறை.

நந்திதேவர் நெற்றிக்கண், நான்குதோள், நீலகண்டம் முதலியவற்றுடன் சிவரூபம் பெற்றவராய்க் கையிலே உடைவாளும் பிரம்பும் தாங்கியவராய்த் திருக்கோயில் அதிகாரத்துடன் நிற்கும் முதல் அடியார். இடபதேவரான தருமதேவதை. திரிபுர சங்காரத்திலே திருமாலும் இடப வடிவங்கொண்டு சிவபெருமானைத் தாங்கினார். இடபமே அடியார்களுக்கு அருள்புரிய இறைவன் எழுந்தருளும் போதெல்லாம் உகந்த ஊர்தியாகும்.

நந்தி - துவிதியசம்பு, சம்புவுக்கு ஒப்பானவன் என்றும் நந்தி எல்லா ஞானத்தாலும் நிறைந்தவர் என்றும் ஐயா உரை யில் கூறியுள்ளார்கள்.

**திருமலைச்சிறப்பு பாடல் - 11**

**நெற்றியில் கண்ணர் நாற்பெருந்தோளர் நீறணி மேனிய ரனேகர்**
**பெற்றமேல் கொண்ட தம்பிரா னடியார், பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்**
**மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும் மலர்க்கையிற் சுரிகையும் பிரம்பும்**
**கற்றைவார் சடையா னருளினாற் பெற்றான் காப்பதக் கயிலைமால் வரைதான்**

**பொருள் :** நெற்றிக் கண்ணும் நான்கு தோள்களும் திருநீறு பூசிய மேனியும் உடையவர்களாயும், இடப வாகனத்தில எழுந்தருளும் சிவபெருமானின் அடியவர்களாயும், பெருமா னது திருவருளைப் பெறுபவர்களாயும் அனேகர் இருந்த னர். அவ்வடியார்களுக்கெல்லாம் தலைவராகிய திருப்பணி விடையும் மலர்போன்ற கையிலே உடைவாள், பிரம்பு ஆகிய இவைகளையும் கற்றையாகக் கட்டிய நீண்ட சடையை யுடைய சிவபெருமானது திருஅருளினாலே பெற்றவராகிய நந்தியெம்பெருமானாற் காக்கப்படுகின்றது இந்தக் கயிலைப் பெருமலையேயாம்.

**வி-உரை :** நெற்றியில் கண்ணர் நாற்பெருந்தோளர் நீறணி மேனியர் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று பாதங்களுக்கும் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் என்றும் மூன்று பதமுத்திகளை வகுத்தது சைவ சித்தாந்த சாத்திரம். இங்குக் கூறியவர்கள் சிவபெருமானது திருவுருவத் தைப் பெற்ற அடியவர்கள், யோகத்தால் சாரூபம் பெற் றோர் என்க. தம்பிரான் அடியார் என்றும், அருள்பெறுவார் என்றும் கூறும் இருவகையினரும் முறையே கிரியை சரியை களாற் பேறுபெற்றவர்கள் என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் கூறியுள்ளார்கள்.

யோகநிலையை உலகத்தில் விளக்கிக் காட்டும் ஆசாரிய ராய் அவதரித்தவர் நம்பிகள், ஆதலின் அவர் எழுந்தருளும் சோதியானது அதுபோலவே யோகநிலையின் பயனைப் பெற்றுச் சாரூபம்

கொண்டவர்களாகிய அடியார்களிடையே யோக ஒளி யாய்ப் புகுகின்ற நிலை இங்குக் குறிப்பிட்டவாறு. யோக நிலையினர் சாரூபம் பெறுதல் பிள்ளையார் தேவாரத்தில் காணலாம்.

**சினமலி அறுபகை மிகுபொறி சிதைதரு வகைவளி நிறுவிய**
**மனனுணர் வொடுமலர் மிசையெழு தருபொருள் நியதமும் உணர்பவர்**
**தனதெழில் உருவது கொடுஅடை தகுபரன்**
**- (திருச்சிவபுரம் - நட்டபாடை)**

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்துள், **"மனன் உணர்வொடு நியதமும் உணர்பவர்"** என்ற குறிப்பையும், பின்னர் உபமன்னிய முனிவர் **"சிவன் தன்னையே உணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான்"** என்பதனால் காணலாம்.

**நெற்றிக்கண் -** நான்குதோள் முதலியன இறைவனது உருவம், அனேகர் இவ்வுருவம் பெற்ற முத்தான்மாக்கள் எண்ணில்லாதவர்கள்.

நீறணி மேனியர் - என்றபடியால் சாரூபம் பெற்றாரும் திருநீறு கண்டிகை முதலிய சிவ சின்னங்கள் தரிக்கும் நியதி யுடையார் என்பது அறியப்படும். இவர்களுக்குத் தமது உருவம் தரும் இறைவன் திருமேனியிலும் இவை விளங்குவன என்பதால் எந்தநிலையில் உள்ளவர்களுக்கும் சிவசின்னங்கள் முக்கியம் என்பதை உணரலாம்.

தலைமையாம் பணி - சிவ உருவம் பெற்றவராய்ச் சுரிகை-கயும் பிரம்பும் தாங்கிக் கயிலை மலையையும் கோயிலையும் காவல்புரியும் முதன்மை ஆகிய பணிவிடை.

**பெற்றம் -** இடபம், இடபதேவர் வேறு, நந்தியெம் பெருமான் வேறு, இவர்களை ஒன்றாக மயங்கக்கூடாது. அதிகார நந்தி எனப்படுபவர் நந்திதேவர். இவர் பொருட்டு இறைவர் சேவை தந்தருளும் திருவிழா, பல தலங்களில் சிறக்கக் கொண் டாடப்படுகின்றது. இடப வாகனக் காட்சி என்ற விழா வேறு. இறைவனைத் தாங்குவது இடபம்.

**வரைதான் -** இவரது காவலின் பெருமை பெற்றது திருக் கயிலை மலையே, இப்பாட்டிலே குறித்த சாரூப முதலிய நிலைகளையும், அவற்றிற்குக் காரணமாகிய யோகம் முதலிய நாற்பாதங்களையும் பற்றித் தாயுமானவர்

**விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்**
**அரும்பு மலர் காய்கனிபோ லன்றோ பராபரமே**

என்று அருளியிருத்தல் காணலாம். ஞானிகள் அடைந்த நிலை சாயுச்சியம். இது காணவும் சொல்லவும் முடியாமையால் இதற்கு அடுத்த நிலையாகிய யோகபலனாகிய சாரூபம் இங்குக் கூறப்பெற்றது.

**தம்பிரான் -** ஆன்மாக்களாயுள்ள தமக்குப் பிரானாயுள்ளவர் ஆதலின் அவர்க்குப் பிறர் எல்லாரும் அடியவர்களேயாவர்.

**(தொடரும்)**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# அற நெறி நில்

திசை மாறிப்பயணித்துக் கொண்டிருக்கும் இன்றைய இளந்தலைமுறையினரிடையே **"பருவத்தே பயிர் செய்"** என்ற ஆன்றோர் வாக்கிற்கமைய சிறார்களின் வெள்ளை உள்ளத்தில் உண்மை, அறம், நம்பிக்கை என்பவற்றுள் அறமே சிறந்தது என்பதை **"அறம் செய விரும்பு"** என்றார் ஒளவையார். இதனை ஆரம்பம் முதல் ஊட்டி வளர்த்து பெரு விருட்சமாக தழைத்தோங்கி நாடு பயனுற வாழ்வதற்கு அறமானது மாணவர்களிடையே பட்டறிவு / படிப்பறிவு மூலம் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஆரம்ப காலங்களில் மாணவர்கள் தமது வாழ்க்கையில் பின்பற்றப்பட்ட நெறிமுறைகளினூடாக அறங்கள் பட்டறிவு மூலம் வளர்க்கப்பட்டது. ஆனால் இன்று இந்நிலை மிக அரிதாகி தொழினுட்ப உலகில் பயணித்துக் கொண்டிருக்கின்ற மாணவர் மத்தியில் படிப்பறிவின் மூலமே அறத்தை வளர்க்க முடியும்.

ஆரம்பகாலங்களில் பாடசாலைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட அறத்தோடு கூடிய சமயக் கல்வியானது இன்று முறையாகப் போதிக்கப்படாது விஞ்ஞான தொழினுட்ப கற்கை அதிகரித்து வரும் சூழலில் அறப்பண்புகள் மாற்றமடைவதோடு ஒழுக்கம் இல்லாத கல்விசூழல் உருவாகிவிட்டது.

பெற்றோர் பிள்ளைகளிடையே காணப்பட்ட அன்புப் பிணைப்பினை மாணவர்களின் மேலதீக வகுப்புக்களும், பெற்றோர்களின் பொருளாதாரமும் சூறையாடி விட்டது. தற்காலச் சமூகத்தில் பெரும்பாலானோரிடம் மனித விழுமியங்களும் ஆன்மீக விருத்தியின் பாலான கரிசனைகளும் அருகியே குறிப்பாக இன்றைய இளைஞர்களிடையே சமூகத்தில் தற்கொலை, மதுப்பழக்கம், பயங்கரவாதம், சவால்களை எதிர்கொள்ள முடியாமை போன்ற காரணங்கள் பெருகியுள்ளமை அறக்கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகிறது. மாணவர் மத்தியில் சரியான அறக்கல்வி கிடைக்காமையைக் காணமுடிகிறது. இதன் காரணமாக பிரச்சனைகள் உள்ள சமுதாயம் உருவாகின்றது. இந்நிலமை காரணமாக விழுமியக் கல்வியின் தேவை இப்போது அதிகரித்துள்ளது.

இக்கால கட்டத்தில் அறக் கல்வியைப் போதிப்பதை முதன்மையாகக் கொண்ட அறநெறிக் கல்வி முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுவதாலே கிராமங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகளை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்தி நாடெங்கும் அறநெறிக் கல்வி ஊட்டப்பட்டு வருகின்றது. **"இளம் சைவச் சிறார்களுக்கு, அவர்கள் மனம் ஏற்றுக் கொள்கின்ற வளருஞ் சிறு பருவத்திலேயே உயர்வான வாழ்வின் மதிப்பீடுகளை நன்கு கிரகித்துக் கொள்ளவும், ஒழுக்கந்தரும் பழக்கங்களை வளர்த்துக் கொள்ளவும், மனதிலும் உணர்ச்சிகளிலும் அறிவிலும் நீதிநெறி வழியிலும் ஆன்மிகத்திலும் மலர்ந்து விரிந்து முழுமையான ஆளுமைத் தன்மையை வளர்க்கவும் பயிற்சியளித்து வழிகாட்டி ஒழுக்க நெறிமுறை சார்ந்த சமுகத்தை உருவாக்குதலே அறநெறிக் கல்வியின் குறிக்கோளும் இலட்சியமுமாகும்".** அறநெறி மாணவர்களின் வாழ்க்கையை வழிப்படுத்துகின்ற



செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

விழுமிய நூல்கள் திருக்குறள், நன்னெறி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, உலகநீதி ஆகும். இந்நூல்களின் நல்ல கருத்துக்களைப் மனனம் செய்யவைக்க மாணவப் பருவமே சிறந்தது என்பதை உணர்ந்து அறநெறி துணைப்பாடத்திட்ட நூல்களாக இவை சேர்க்கப்பட்டுள்ளன.

மனிதன் மனிதனாக வாழ அத்திவாரம் இடுகின்ற அறநிலையங்களே நம் அறநெறிப் பாடசாலைகள். **"மனிதனுள் மறைந்து இருக்கின்ற தெய்வீகத் தாமரையை மலரச் செய்வதே சமயம்"** என்றார் சுவாமி விவேகானந்தர். அதனையே அறமாகக் கொண்டு அன்பொடு அருளும் ஒழுக்கமும் பேணி ஒல்லும் வகை எல்லாம் மன்னுயிர் ஓம்பி மாநிலம் தளைக்க மண்குலம் சிறக்க வழி காட்டும் நற்கூடங்களாகத் திகழ்கின்றன நம் அறநெறிப் பாடசாலைகள். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்றும் அவ்வாறு வாழும் முறைப்படி வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற வள்ளுவன் வாக்கை சிறுபராயம் முதல் அனுபவ வாயிலாக புகட்டும் நிலையங்களாக அறநெறிப் பாடசாலைகள் விளங்குகின்றன.

இவை வெறுமனே ஏட்டுக்கல்வியை வழங்கும் நிறுவனங்கள் அல்ல மாறாக தனிமனித விருத்திக்கும் கூட்டு வாழ்க்கைக்கும் தேவையான பல்வேறு ஆற்றல்களை வளர்க்கவும் பாடுபட்டு உழைத்து வருகின்றன. பண்ணோடு பரமனை ஏத்திப் புகழவும் நித்தலும் எம்பிரான் கோயிலுக்குச் சென்று ஆணவம் வலி கெடவும் ஆலயப் பணி செய்யவும் வழிகாட்டி வருகின்றன. அத்தோடு இலை மறை காயாக இருக்கின்ற அறநெறிச் சிறார்களின் நாவன்மையை வளர்க்க பேச்சு, நடிப்பாற்றலை வளர்க்க நாடகம், நினைவாற்றலை வளர்க்க மனனப் போட்டி, கதாப்பிரசங்கம் கதை கூறும் ஆற்றலை வளர்க்க வில்லுப்பாட்டு, சிந்தனை ஆற்றலை வளர்க்க புராணபடனம் என்று பல செயற்திட்டங்களை முன்னெடுத்து அறநெறிச் சிறார்களின் மனங்களில் உள்ள மாசு அகற்றவும் ஆளுமை வளரவும் வழிகாட்டுகின்றது.

**"ஒல்லுவதெல்லாம் உயர் ஒல்லல் என்னும்"** வள்ளுவன் வாக்கிற்கிணங்க, இளம் சைவச் சிறார்களின் இதயங்களில் உள்ள தெய்வீகத் தாமரையை மலரச் செய்து அவர்களின் ஆளுமையும், திறமைகளும் மலர்ந்து விரிவடையச் செய்யும் ஆன்மீகக் கல்வியை வழங்குதலை குறிக்கோளாகக் கொண்டு நல்லறம் வளர்த்து நற்பணி புரிந்து பத்தி உணர்வை தளைத்தோங்கச் செய்ய நாளும் உழைத்து வரும் நல் அமைப்பாக காலத்தின் தேவை அறிந்து கனிந்த முகிழ்ந்த நிலையங்களே இந்து அறநெறிப் பாடசலைகள் எனலாம். இதனை சரியாக பயன்படுத்தி பயன்கொள்வது சமூகத்தின் தலையாய கடமையாகும்.



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org




# The Cycle of Rebirth

One of the core principles of Tamil philosophy and spirituality is the belief in the cycle of rebirth, a continuous loop in which we remain until we prove ourselves worthy of eternal bliss through righteous actions. This existence is shaped by three elements, Pathi (Sivan), Pasu (our souls), and Pasam (ego and worldly attachments). Pasam is what binds souls to this cycle, preventing liberation. It represents our attachments to the material world, fueled by desires, ignorance, and ego.

Rather than being consumed by material wealth or possessions, we should prioritise higher pursuits, such as strengthening connections with other souls and deepening our devotion to God. Many Tamil philosophical teachings emphasise that the ultimate goal is to break free from Pasam through devotion, knowledge, and spiritual discipline, thereby liberating the soul and uniting it with Pathi. Hence, we should not prioritise material wealth or objects, but rather seek spiritual truth, the well-being of other souls, and ultimately, communion with Siva.

As Manikkavasagar states in Sivapuranam:

**"சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை,**
**முந்தை வினை முழுவதும் ஓய உரைப்பான் யான்"**

"And I recite the entire Sivapuranam
So that the karma of all will be destroyed."

This verse teaches that prayer and devotion towards Sivan will cleanse karma, allowing one to transcend ego and ultimately break free from the cycle of rebirth. To achieve this, one must embark on a journey of self-discovery, questioning one's true essence. This cannot be done by merely looking in a mirror, which reflects only the external, material self. Instead, one must look inward, beyond physical form, and recognise the true nature of the soul. Only through this realisation can one act with true goodness, diminish the ego, and ultimately transcend the cycle of rebirth to reunite with Sivan. While devotion and knowledge are essential, they must be coupled with good deeds. The practice of having a righteous living, ensures that we align our actions with divine will, purifying the soul and drawing us closer to Sivan. Only through selfless actions, compassion, and the desire to benefit others can we shed the attachments of the material world.



# Saiva Saint Meiporul Nayanar

## The Devotee who saw Faith triumph over emotions

As we embark upon the continuation of the illustrious hymns of the saintly 63 of Saivism, Saint Meiporul Nayanar is the 4th in order. His life and the choices he made at its end speak to us about the conviction with which we should uphold and maintain our moral compass. Even at the triggering face of the most disgusting and treacherous betrayal, the strength, wise and wit with which he decided to express and exercise his final wishes is amicable. The faith and respect he had attributed to anyone who had adorned the Saivite insignia( Thiru-chinnangal: Thiruneeru, Uruthirakam, etc.) was unshakable and the extent of the belief was so strong that he made sure that his subjects upheld those beliefs and their associated systems of respect at any cost, especially at times of extreme conflict. His story is a fitting example of how 'Devotion and the state of surrenderance transcend the intrinsic survival instinct'.



Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

### The Reign of the Kingly Saint

Meiporular Nayanar was the illustrious king of the Thiruk kovalur region, a land that thrived under his just and benevolent rule. He was a ruler in whom courage and compassion coalesced, ensuring the well-being of his subjects while upholding Tharmam in its purest form, with it being valued more than the process of life itself!

Unlike many other devout rulers of his contemporary, he did not succumb to the epiphanies most others had about being both a devout Saivite and a warrior at the

battle field, they felt that this was inherently in conflict with the process of their worship and that it was disruptive to their faith. As valid as these concerns are, (discussed later in the Periyapuranam) this saint assumes a clear framework of duty and surrenderance. The Driving force of this Saint's life, rule and devotion, is the discipline of adherence to the Morals which he had held at such high esteem. To him the emotional conundrum of the other rulers boiled down to this, as a ruler, it is his duty to fulfill acts of peace or war as they necessitate, and see through that the execution is bountiful, even if there looms a cloud of doubt over it. That level of personal conflict and conflict of interest shan't be at the expense of any matters of the state of the general safety of his subjects. Which meant that these steadfast principles also made him very vulnerable to evil and malevolent plots of betrayal and treachery, as he practices the principle of respect to the letter and, in doing so, he considers it offensive to second guess a person's intentions, god forbid it be that of a Siva Thapasvi!

### Test, Tragedy and Piety

True devotion is often tested, and Meiporular Nayanar's greatest trial came at the hands of an enemy who sought to vanquish him through deceit rather than valor. This adversary, knowing well that confronting Meiporular on the battlefield would end in certain defeat, devised a sinister scheme to eliminate him.

Disguising himself as a Saivite sage, the enemy infiltrated the palace, approaching Meiporular as if he were a humble devotee. Clad in the sacred attire of a pious ascetic, he carried a set of Uruthiraka (Rudraksha) beads and smeared his forehead with Thiruneeru, an appearance that would command reverence from any devotee of Lord Siva. Meiporular, being the embodiment of righteousness and faith, welcomed the visitor with the utmost reverence, oblivious to the treachery that lay concealed beneath the garb of piety.

As was his custom, Meiporular set aside his royal stature and bowed before the supposed sage, ready to heed any words of wisdom that might emanate from his lips. In this moment of vulnerability, the traitor struck, drawing a concealed weapon and fatally wounding the noble king. The blow was sudden and lethal, but it did not shake the foundation of Meiporular's devotion. Rather than succumb to anger or grief, he remained composed, his mind anchored to the divine feet of Lord Siva.


### Strength of Virtue - Through and Through

Even as life ebbed away from his body, Meiporular Nayanar did not waver in his faith. Instead of condemning his assassin, he chose the path of supreme forgiveness, as one must in any general occasion and especially here because, regardless of the nature of the action or the degree of authenticity of the costume, the perpetrator was in a Venerable Saivite attire. With the serenity of one who had transcended mortal limitations, Meiporular instructed his guards not to harm the assailant, treating him instead as a means through which his soul would merge with the divine. In his final breath, he uttered the holy name of Siva Peruman, his lips adorned with the vibration of the chant, Om Nama Sivaya.

This moment of absolute surrender is what immortalised Meiporular Nayanar in the annals of devotion. His story is not just one of bravery but of ultimate renunciation, where faith triumphed over vengeance, and devotion eclipsed and nullified the realm of human emotions. Such was his greatness that even his betrayer stood in awe, realizing the immeasurable depth of true Saivite Devotion.

# Ancient Tamil Kingdoms and Leaders

## Raja Raja Cholan



Siva P.Ketharan
English Editor – Thennadu

Raja Raja Cholan is an astounding figure whose identity has stood the test of time and is still known to millions of people close to a thousand years after his passing. He was a great leader of the Chola Dynasty and ruled the majority of southern India and pockets of Southeast Asia during the 10th and 11th centuries. Raja Raja Cholan's most notable achievement and crowning glory was undoubtedly the Thanjavur Periya Koyil, a masterpiece of Tamil architecture that stands as a testa ment to human ingenuity and devotion. The mammoth structure constructed in the 11th century is a marvel that has withstood the complexities of time and still has the capacity to resonate with millions of people. Further Raja Raja Cholan's impact on this world can be further highlighted through his role in obtaining the Thirumurais. During his rule, only a few sacred verses of the Thirumurais had been known. But Raja Raja Cholan's passion and love for these sacred hymns motivated him to find all these literary masterpieces to spread the wealth of knowledge that had been written in them. Nambi Andar Nambi and the king himself recollected around 10% of all the Thirumurais from Chiddambaram Temple as the rest had been damaged by termites. Raja Raja Cholan's strong motivation to rediscover these Thirumurais has left a lasting impact on the lives of millions throughout history and even until this day. We will continue to acknowledge Raja Raja Cholan's legacy for many millennia to come, however, we should strive to think beyond and truly reflect on his accomplishments. Only then must we ask ourselves: What are we building today that will withstand the passage of time whilst maintaining Tamil culture? In a world marked with rapid and ever-occurring changes, the legacy of this king challenges us to extend our vision beyond the present, and strive for contributions that last hundreds of lifetimes.




Thanjavur Periya Koyil built by Raja Raja Cholan

After the deaths of Raja Raja Cholan and Rajendra Chola 1, the Chola dynasty soon faced a decline and around the 13th century was absorbed by the Pandyan kingdom, ultimately ending one of the greatest rulers the world has ever seen. A dynasty that created a legacy that is still felt today.

## Pandyas

The Pandya dynasty was one of the most illustrious and ancient dynasties of ancient Tamil history. Emerging as early as the Sangam period (circa 500 BCE to 300 CE), the Pandyas were known for their contribution to Tamil culture, literature, temple architecture and huge global trade links. They ruled from their capitals at Madurai and later Korkai, and fostered a huge legacy that has shaped Tamil




Pandya's Flag

heritage enormously. The Pandyas were first mentioned in Sangam literature, where they were described as great and just leaders who served to protect and grow Tamil culture. Early Pandya rulers like Nedunjeliyan, celebrated in Sangam poetry, were lauded for their valiant military exploits and just rule. Their kingdom was famous for its flourishing pearl trade, centred around Korkai near the Gulf of Mannar, which linked Tamil Nadu to Mediterranean and Roman markets. During the Sangam age, the Pandyas were integral to the shaping of Tamil culture. The Pandyas promoted Tamil as the language of administration, literature, and religion, contributing significantly to the early Tamil identity. However, between the 4th and 6th Centuries, the Pandya kingdom's power was reduced temporarily with other smaller dynasties taking control. However, they resurged during the 6th century CE under kings like Kadungon who restored Pandyan supremacy. This marked the beginning of the medieval Pandya period which was characterised by their military prowess, temple construction and their great emphasis on Saivam. The 13th century CE marked the height of Pandya power under rulers like Jatavarman Sundara Pandyan I and Maravarman Kulasekara Pandyan I. During this time The Pandyas thrived economically through extensive trade with Southeast Asia, the Middle East, and China. They were renowned for their contributions to temple architecture, notably the Meenaksi Amman Temple in Madurai, and for their tremendous efforts in preserving and promoting Tamil arts, philosophy and literature. The Pandya empire faced significant challenges in the 14th century due to internal strife and invasions by the Delhi Sultanate which ultimately failed them. Yet their legacy lives on until this day and are still renowned for their efforts in effectively creating Tamil Heritage itself.

## Cheras

The third main dynasty of the Sangam age was the Chera dynasty, which ruled over the southwestern region of India, primarily in what is now Kerala, and parts of modern-day Tamil Nadu. They were known also for their maritime intelligence and their vast contributions to Tamil culture. The Cheras' power base lay in the port city of Vanchi, which became an important centre for maritime trade. The Cheras played an important role in maintaining a maritime network that stretched across the Indian Ocean. They maintained trade relations




Chera's Flag

with distant regions such as Mesopotamia, the Arabian Peninsula, Southeast Asia, and China. The Cheras had huge support for Sangam age poets with several kings also mentioned as having created pieces as part of Sangam literature. Like all the other kingdoms the Cheras met their end around the 12th century CE, leaving a valuable legacy having formed one of the greatest eras of Tamil history.

# வடமாகாண பாடசாலைகளுக்கான சிவனிரவு பூசைப் பொருட்கள் கையளிப்பு



கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி



கிளி/ கோணாவில் மகா வித்தியாலயம்



கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்



கிளி/ பளை மத்திய கல்லூரி



கிளி/ பளை இந்து ஆரம்பப் பாடசாலை



கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம்



கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்

# வடமாகாண பாடசாலைகளுக்கான சிவனிரவு பூசைப் பொருட்கள் கையளிப்பு



கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்



யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்



யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை



மு/விசுவமடு மகா வித்தியாலயம்



யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்



யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி




யா/ வேலணை மத்திய கல்லூரி



கிளி/ பூநகரி மத்திய கல்லூரி

# Second Doubt (Refuting the Dehaanmavaadam)



**Last month Summary :**

Sivakan, an 8-year-old, and his friends discussed whether the soul exists as a separate entity from the body. To explain, Sivakan used the example of an old lady who scolded them while alive but remained silent after death, showing that something, her soul, had left her body. He further reasoned that just as the absence of elephants in cold climates implies their presence elsewhere, denying the soul's presence in a dead body acknowledges its existence. When his friend argued that negating every body part as the soul implies its non-existence, Sivakan explained that the very ability to negate proves the existence of an intelligent, conscious entity. His friends finally grasped that the soul, though unseen, is the source of awareness and life.

Another friend raised a different question. 'When somebody calls 'Muruga' who responds to that call? That particular body which was given the name 'Muruga' alone responds to that call. So why can't we say that the body itself is the soul (Uyir)?'

I explained to him, let us consider your proposition. If you think that the body responds to the call, then it should respond even after death, is it not? But the dead body is not seen to respond at all when its name is called. Where is the soul, the uyir in it?' Besides that when Murugan says, 'my body', it itself indicates that knowingly or unknowingly he feels that he is someone other than his body!

Let me explain it further. When we say 'my house' it means that the house is my property and that it is not me. 'I' am not my property; I am different from 'my property'. In the same manner when Murugan says, 'my body' that sense of 'myness' and consequently the usage of the possessive pronoun 'my' itself proves the fact that he, the soul, is other than his body. Is it not?"

My friend is yet to get fully convinced. Hence he argued, 'But Murugan is seen to cry out it hurts so much that it feels as if I am dying', when he is bodily hurt. What does it mean?'

I said that during such a situation, he means merely the state of living by the term 'uyir 'and not the subtle soul. He is not aware of the subtle soul, the intelligent entity. Therefore it is to be clearly understood that the body and the soul are two different entities.

**Saiva Philosophy Reference:**

The takeaway of this story is that the soul (Uyir) is distinct from the body, as seen in the way one refers to "my body," implying ownership rather than identity. While the body ceases to respond after death, the soul as an intelligent, conscious entity, exists beyond it.

**Reference: Saiva Siddhantham**
**A way of Life by Kovai Kizhar**

**To be contd...**

# தென்னாட்டு நிகழ்வுகள்



யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் தென்னாட்டின் சைவக் கருத்தரங்கு நிகழ்வு (25-02-2025)









தருமையாதீனத் தம்பிரான் சுவாமிகளுடன், தமிழ்நாட்டு ஓதுவார்கள் தென்னாட்டில் வழிபாடு (25-02-2025)



பெருஞ்சிவனிரவன்று தென்னாட்டில் இடம்பெற்ற கலைநிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவர்கள் (26-02-2025)

# தென்னாட்டு நிகழ்வுகள்



தைத் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (12-02-2025)





தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐம்பத்து ஐந்தாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 29ம் நாள் நிறைமதி அன்று (13-03-2025 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org